திராவிடத்தின்

# குரல்



பேராசிரியர்
க. அன்பழகன் எம்.ஏ.,

# திராவிடத்தின் குரல்

★

பேராசிரியர் க. அன்பழகன், எம்.ஏ.,

★

தமிழ்க்கொடி பதிப்பகம்
88, தம்புச்செட்டித் தெரு
மண்ணடி – சென்னை–1

உரிமை : ஆசிரியருக்கு

விலை : உரு. 2-50

வெளியீடு : கலைக்குழு கோட்டைசாமி
தமிழ்க்கொடி பதிப்பகம்

நூல் கிடைக்குமிடம் :-

**தமிழ்க்கொடி பதிப்பகம்,**

88, தம்புச்செட்டி தெரு,
மண்ணடி - சென்னை - 600 001.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book : "DRAVIDATHIN KURAL" Author. Peraasiriyar K. ANBAZHAGAN. Language : Tamil. Edition 1982. Copy Right : Author. Paper Used : 11-6 Kg, D/Crcwn. Size of the Book : Crown Octavo. Printing Types Used : 10, 12, 18 Points. No. of Copies Printed : 3000. Price : 2-50. Printers : Thamizhosai Atchagam. 84, Habibullah Road, Thyagarayar Nagar, Madras-17. Binding : Card Board, Publisher : Thamizhkodi Pathippagam. Subject : Speech.

---

அச்சிட்டோர் : தமிழோசை அச்சகம், 84, அபிபுல்லா சாலை,
தியாகராயர் நகர், சென்னை - 17.

# பதிப்புரை



மராட்டிய மண்ணின் தலைநகரான பம்பாயில் 19-10-81 அன்று கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் பெருந்தகை ஆற்றிய அற்புத சொற்பொழிவினை நூல் வடிவமாக்கி தமிழ் மக்களின்—அறிவுத் தெளிவடைய அனைவரின் இல்லங்களிலும் இருந்திடச் செய்ய வேண்டு மென்ற எனது விருப்பத்தைப் பேராசிரியர் அவர்களிடம் தெரிவித்து வேண்டினேன். எனது வேண்டுகோளினை ஏற்று நூல் வடிவமாக்கி வெளியிட்டுக்கொள்ள அன்புடன் அனுமதி வழங்கிய பேராசிரியர் பெருந்தகை அவர்கட்கு என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.

இந்நூல் சீரிய முறையில் அமைந்திட உழைத்த தமிழோசை அச்சகத்தாருக்கும் முன்னாள் மேயர் அன்பு மிகு சா. கணேசன் அவர்களுக்கும் திரு புலவர் கோ. அண்ணாமலை எம். ஏ., பி. எட்., அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியதாகும்.

இதனை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் அனைவர்க் கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்,

வெல்க தி. மு. க. வின் கொள்கை!
வளர்க செந்தமிழ் அறிவு!

இவண்,
கலைக்குழு கோட்டைசாமி

தமிழ்க்கொடி பதிப்பகம்,
88, தம்புச் செட்டித் தெரு,
மண்ணடி-சென்னை - 1.

# வாழ்த்துரை

பைந்தமிழ் அருவி; பரணி பாடும் போர் வீரர், பண்டைத் தமிழரின் மரபெடுத்துப் பாடி வீடமைத்திடும் போர் முரசம், பைந்தமிழ்க் காவலர் பெருந்தகை பேராசிரியர் அவர்களின் பேருரைகள் தமிழர்களின் போர்க் கவசங்கள். பேராசிரியர் அவர்கள் ஆற்றுகிற உரைகளில் பாடம் படித்தோர் ஏராளம்; பயிற்சி பெற்றுப் பேச்சுத் திறன் பெற்றோர் எண்ணற்றவர்.

வற்றாத நீரூற்றாய்ப் பாய்ந்து வரும் கருத்துக்கு உரிமையாளர் பேராசிரியர். தமிழர்கள் வாழுமிடமெல்லாம் அவரது கவனம் திரும்பும்.

இனமானம், தன்மானம்—இந்தச் சொற்கள் பேராசிரியரின் இதய உறுப்புகள்.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் தலை நிமிர்ந்து வாழப் போர்க்குரல் தொடுப்பவர் பேராசிரியர்.

மராட்டிய மண்டலத்தின் தலைநகராம் பம்பாயில் தமிழ்ப் பெருங்குடி மக்களிடையே பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை 'திராவிடத்தின் குரல்' எனும் தலைப்பில் நூலாக வருகிறது.

தி. மு. கழகத்தின் செயல்மறவரான, இசைக்குயில் எனது கெழுதகை நண்பர் கோட்டை சாமி அவர்கள் தமது தமிழ்க்கொடி பதிப்பகத்தின் முதல் வெளியீடாக இந்நூலை வெளியிடுகிறார்; இஃது இவரது ஆர்வமிக்க, ஆற்றல் மிக்க முதல் முயற்சியாகும். நெஞ்சாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அன்பன்

**ச. அமுதன்**

தி. மு. க. தலைமை

இலக்கிய அணிச் செயலாளர்

135, தெற்கு ரத வீதி
திருவில்லிபுத்தூர்-626125

பம்பாயில் அறிஞர் அண்ணு அறிவாலயக் கட்டிட நிதி திரட்டுவதற்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் கலந்துகொண்டு சிறப் புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியின் மூலம் கட்டிட நிதி யாக ரூபாய் 25 ஆயிரம் திரண்டது.

பேராசிரியர் அவர்கள் 19–10–81 திங்கட்கிழமையன்று பம்பாயில் மக்கள் நலக்கல்விக் கழகச் சார்பாக, அறிஞர் அண்ணு அறிவாலயக் கட்டிட நிதிக்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

பம்பாய் சண்முகானந்தா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு திரு. த. மு. பொற்கோ வரவேற்புரையாற்ற, பம்பாய் கழகச் செயலாளர் திரு. எஸ். தியாகராசன் தலைமை தாங்கினர். நிகழ்ச்சியில் மராட்டிய மாநில வீட்டு வசதி வாரிய துணை அமைச்சர் மாண்புமிகு பிரேமானந்த அவலே அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பேராசிரியர் அவர்கள், தமிழகத்தில் பேரறிஞர் அண்ணு அவர்களும், கலைஞர் அவர்களும் முதலமைச்சர் களாக இருந்து ஆற்றிய சமுதாயப்பணிகளையும், குறிப் பாகக் குடிசைவாழ் மக்களுக்கு அளித்த நல்வாழ்வுத் திட்டங்களையும் விளக்கினர். பேராசிரியர் மேலும் பேசு கையில் தமிழகத்தின் கடந்த கால வரலாறு—மராட்டியம் உள்ளிட்ட பழங்கால பஞ்சதிராவிடத்தின் மாண்புகள், தமிழ் மொழியின் சிறப்பு, குமரிக்கண்டத்தின் பெருமை, தமிழ் இலக்கியங்களின் அருமை, நீதிக்கட்சித் தலைவர் களின் குறிக்கோள் ஆகிய அனைத்தையும்பற்றி விரிவாக வும் விளக்கமாகவும் ஒன்றரை மணி நேரத்திற்குமேல் பேசினர்.

## பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் நிகழ்த்திய உரை

பம்பாய் நகரத்தில் நடைபெறுகிற இந்தச் சீரிய விழாவில் நான் கலந்துகொள்ளக் கூடிய நல்லதொரு வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டிருப்பதற்காக எனது உள மார்ந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் நான் கடமை உணர்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பம்பாய் நகரத்தில் இந்த அளவு பெரிய வரவேற்பு காத்திருக்கிறது என்று தெரிந்திருக்குமானுல், நான் இன்னும்கூட ஆறு திங்களுக்கு முன்னுலே வருவதற்கு முயன்றிருப்பேன்.

பம்பாய் நகரத்திலே உள்ள கழகத் தோழர்கள் எத்துணையோ தொல்லைகட்கு ஆட்பட்டவர்கள், பல்வேறு கடமைகளிலே ஈடுபட்டவர்கள்; தங்கள் தங்கள் குடும் பத்தைக் காப்பதே ஒரு பெருங்கடமையாக ஆகியுள்ள நிலையிலே இருக்கக்கூடியவர்கள்."அவர்கள் ஒரு இயக்கப் பணியில் எந்த அளவு ஈடுபட முடியும்?" என்ற எண்ணம் இருந்த காரணத்திஞல்தான் சில ஆண்டுகளுக்கு முன் னுலே எனக்கு அழைப்பு கிடைத்த நேரத்திலே கூட நான் வருவதற்கு ஆர்வம் காட்ட முடியாதவனுக இருந்தேன்.

ஆனுல் 1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8ஆம் நாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் பேரறிஞர் அண்ணு அவர்கள் தமிழகத்தில் முதலமைச்ச ராக பொறுப்பேற்று இருந்த நேரத்தில் நான் பம்பாய் நகரத்திலே ஒரு இரவு தங்கி இங்கே நண்பர்களுடைய அன்பான வரவேற்பைப் பெற்று, பின்னர் மேல் நாடு களுக்கும், அண்ணு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நியூயார்க் நகரத்திற்கும் செல்லுகிற அந்த வாய்ப்பைப் பெற்றேன்.

அப்பொழுது பம்பாய் நகரத்தினுடைய தோழர்களின் ஆர்வத்தை நான் ஓரளவு புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

அதற்கு முன்னலே ஒருமுறை பம்பாய் நகரத்திலே 1962—63 என்று கருதுகிறேன் — தாராவி போன்ற பகுதிகளில் நடைபெற்ற கழகக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக நான் வந்திருக்கிறேன் என்ருலும், இன்றைய தினம் பம்பாய் நகரத்தினுடைய பல்வேறு பகுதிகளிலும் பணி செய்து வாழ்கிற, தொழில் செய்து வாழ்கிற, பாடு பட்டு வாழ்கிற ஏழை மக்களாக உள்ள—அப்படிப்பட்ட தோழர்கள் தாங்கள் தமிழர்களுக்காக, தமிழ் நாட்டிற்காக—தமிழ் இனத்திற்காகப் பாடுபடக் கடமைப்பட்டு இருக்கிருேம் என்ற உணர்வோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தை மிகப் பெரிய அளவிற்கு நல்ல முறையிலே வளர்த்து வருவதைக் காண்கிறபோது நான் உங்களையெல்லாம் மனமாரப் பாராட்ட விரும்புகிறேன்.

நண்பர் தியாகராாசன் அவர்களும் ஆரிய சங்காரன் அவர்களும், பெருமாள் அவர்களும், பொற்கோ அவர்களும் மற்ற தோழர்களும் முன்னணியில் இருந்து பொறுப்போடு செயல்படுவது காரணமாகும். நான் மற்றவர்களுடைய பெயரைச் சொல்லாதது அவர்களுடைய பெயர்களை உடனடியாகச் சொல்வதற்கு நான் நினைவிலே வைத்திருக்காதது காரணமே தவிர அவர்கள் ஆற்றுகிற பணியை நான் குறைவாகக் கருதுவதாக, தயவுசெய்து அவர்கள் கருதிக்கொள்ள வேண்டாம். அவர்களுடைய பெயர்களை எல்லாம் நான் சொல்லக் கடமைப்பட்டவன். அவர்கள் ஆற்றி வருகிற பணி பொறுப்புணர்ச்சியோடு கடமையுணர்ச்சியோடு நடைபெறுகிற காரணத்தாலே தான் இந்த அளவு நல்லதொரு செல்வாக்கை மராட்டிய மாநிலத்து அமைச்சராக இருக்கிற நண்பர் பிரேமானந்த அவலே அவர்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு நீங்கள் பெற்று இருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன்.

அமைச்சராக இருக்கிற பிரேமானந்த அவலே அவர்கள் இங்கே உரையாற்றிய நேரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படுகிற அநீதியைக் குறித்து அதுவும் இலங்கையிலே இழைக்கப்பட்ட அநீதி குறித்து தமிழ் மக்கள் வெகுண்டெழுந்த நேரத்தில் — வேதனையோடு குரல் எழுப்பிய நேரத்தில்—கடந்த எட்டு பத்தாண்டுகளுக்கு முன்னுலேயே அவர்களோடு சேர்ந்து நானும் குரல் கொடுத்து இருக்கிறேன் என்று தெரிவித்தார்கள். அந்த நல்ல உணர்வை இந்த நேரத்திலே நான் பாராட்ட விரும்புகிறேன்.

அந்த அமைச்சர் தாழ்த்தப்பட்டவர் என்பதால் தமிழர்களுக்கெல்லாம் உறவினராகி விட்டாரோ என்று நான் எண்ணுகிறேன். இருந்தாலும் மராட்டிய மாநிலமும் கூட திராவிடத்தோடு மிக நெருங்கிய உறவு உடையது என்ற காரணத்தால் அவலேயினுடைய உணர்ச்சி தமிழர்களுடைய உணர்ச்சியாக இருப்பதிலே ஆச்சரியம் இல்லை என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல இப்பொழுது அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடமும் தாராவி தொகுதி என்பதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அவர் தாராவியிலேதான் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு உறுதுணையாக இருக்கிற தாராவி, தமிழர்கள் நிறைந்திருக்கிற பகுதி—அது தாழ்த்தப்பட்டவர்களோடு ஒன்ருக இருக்கக்கூடிய பகுதி என்பதையும், எங்களுளோடு தமிழர்களாகப் பெருமைப்படக்கூடியவர்கள் மாதுங்காவிலே வாழ்ந்தாலுங்கூட, செம்பூரிலே வாழ்ந்தாலுங்கூட, வேறு பல பகுதிகளிலே பம்பாய் நகரத்திலே வாழ்ந்தாலுங்கூட அதற்கெல்லாம் சற்று வேருக இருப்பது தாராவி என்பதையும் நான் நினை நினைவூட்டுகிறேன்.

எனவே தாராவியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினராக ஆகி, அதன்பிறகு அமைச்சராக ஆகிற நல்ல வாய்ப்புப் பெற்ற பிரேமானந்த அவலே அவர்கள், இங்கு எடுத்துச்சொன்ன அந்தக் கருத்துக்கள் அடிப்படையில், தாராவியிலே வாழ்கிற தமிழர்களுடைய அங்கு வாழ்கிற ஏழை மக்களுடைய,பாட்டாளிகளுடைய கண்ணீரைத் துடைப்பதற்கான அந்தக் கடமையை நிறைவேற்றுவதிலே அவர்கள் தொடர்ந்து ஒத்துழைப் பார்கள், வெற்றி தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கை யும், அவர் தருகிற அந்த ஒத்துழைப்புக்காக தி. மு. கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தாராவியிலே வாழ்கிற மக்களுடைய நிலைமையை நான் 15 ஆண்டுகளுக்கு முன்னலேயும் பார்த்திருக் கிறேன், நேற்றும்கூட தாராவி பகுதிக்குச் சென்று பார்த் தேன். ஏழை மக்கள் வாழ்கிற பகுதி — உழைப்பாளிகள் வாழ்கிற பகுதி—குடிசையிலே வாழ்கிற மக்கள் நிரம்பி யிருக்கிற பகுதி அது. அப்படிப்பட்ட நிலையிலே இருக்க வேண்டிய அந்தச்சூழ்நிலை இன்றைக்கும் இந்த நாட்டிலே நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது.

அந்த நிலையை எண்ணிப் பார்த்தவர்கள்தான் பேரறிஞர் அண்ணு அவர்களும் தந்தை பெரியார் அவர் களும். அவர்கள் ஏழைகளைப்பற்றி எண்ணிப் பார்த் தார்கள். உத்தமர் காந்தியடிகள் எண்ணிப் பார்த்தார் கள். டாக்டர் அம்பேத்கார் எண்ணிப் பாாத்தார். சுவாமி விவேகானந்தர் எண்ணிப் பார்த்தார். வடலூர் வள்ளலார் ராமலிங்க அடிகளார் எண்ணிப் பார்த்தார். மிகப் பெரிய பொதுவுடைமை இலட்சியவாதியான எம். என். ராய் எண்ணிப் பார்த்தார்,

ஆனல் அப்படி எண்ணிப் பார்த்தவர்களிலே, ஏதேனும் சில திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டு

மென்ற முறையிலே செயல்படுத்தியவர்கள் என்று நான் பெருமையோடு குறிப்பிட விரும்புவது நம்முடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான்.

நல்ல எண்ணம் படைத்த சுவாமி விவேகானந்தர் ஏழைகளுக்காக வாதாடினாலுங்கூட ராமகிருஷ்ணமிஷன் என்ற அமைப்பை விவேகானந்தர் அவர்கள் உருவாக்கி, எல்லாப் பிள்ளைகளுக்கும் அறிவூட்டுவதற்காக, ஏழைப் பிள்ளைகளுக்கு வாழ்வளிப்பதற்கு வழி செய்ய முடிந்ததே தவிர, தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்கிற அந்தக் குடிசைப் பகுதியை மாற்றியமைக்கிற அந்தத் திட்டத்தை சுவாமி விவேகானந்தர் அவர்கள் அந்தக் கால சூழ்நிலையில் எண்ணிட முடியவில்லை.

வடலூர் வள்ளலாருடைய உள்ளத்தில், மேல்சாதி யில்லை; கீழ்சாதி இல்லை; எவனும் மனிதனில் உயர்ந்தவ னில்லை; யாரும் தாழ்ந்தவனில்லை; யாரும் தீண்டப்படக் கூடாதவன் இல்லை என்றெல்லாம் எடுத்துச் சொல்லுகிற முறையில் "சாதியிலே மதங்களிலே சாத்திரச் சந்தடி களிலே, கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்" இது அழகலவே என்று, மக்களைப் பார்த்துக் கண்டித்து; சாதி மத சாத்திரப் புரட்டுக்கள் காரணமாக மக்கள் தாழ்த்தப்பட்டவர் களாக; ஒடுக்கப்பட்டவர்களாக; தீண்டப்படாதவர் களாக வைக்கப்படக்கூடாது என்று அறிவூட்டிய வடலூர் வள்ளலார் அருள் நெறியிலே நின்று ஆண்டவனை வழிபட்டு, அவனும் உருவம் கடந்து ஒளியாக இருப்பவன் என்று பேசி, அந்த ஒளியைத் தேடவேண்டியது உனது உள்ளத்திலேதான் என்று அறிவுறுத்தி, அந்த ஒளியை நாடுகின்ற மனிதனிடத்திலே வேற்றுமை உணர்வு இருக் கக்கூடாது, எல்லோரிடத்திலும் அன்பு காட்டுகிற உணர்வுதான் இருக்க வேண்டும் என்று, வடலூர்

வள்ளலார் எடுத்துச் சொன்னாலும், அந்த ஏழைகளுக்காக வாழ்வளிக்கிற ஒரு திட்டத்தை வடலூர் வள்ளலார் எடுத்துக் காட்டுகிற வாய்ப்பைப் பெற்றார் இல்லை.

அதே போல புரட்சி சிந்தனையாளரான அறிஞர் எம். என். ராய், பொதுவுடமை பூக்கின்ற போதுகூட அந்தப் பொதுவுடமை என்பது வெறும் பொருளாதாரத்தில் ஏற்படுத்துகிற சமத்துவமாக இருந்தால் மட்டும் போதாது. அது பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடு அமைய வேண்டும். உலகமெல்லாம் ஒரு குடும்பம் என்று எண்ணிப் பார்ப்பதற்கு ஏற்ப மனிதனுடைய அடிப்படையான உணர்வு பகுத்தறிவு என்ற உணர்வோடு அவன் செயல்படுவதற்கான வாய்ப்பாக அமைய வேண்டும் என்று ஒரு புதிய தத்துவத்தையே எம். என். ராய் அவர்கள் வழங்கினாலுங்கூட, இந்தியாவினுடைய அரசியலில் இப்படிப்பட்ட ஒரு கடமையை குடிசை வாழ் மக்களுக்காக நிறைவேற்றலாம் என்னும் ஆலோசனையை அவர் கூறவில்லை.

ஏழை மக்களுக்காக வாதாடி, குடிசைவாழ் மக்களோடு சேர்ந்து வாழ்ந்து, பங்கிகளாக தோட்டிகளாக தொம்பர்களாக இருக்கின்ற அந்த ஏழை மக்கள் தலை நிமிர்வதற்கு வழிகாட்ட வேண்டும், அவர்களும் மனிதர்கள்தான் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக காந்தியடிகள் அந்தக் குடிசை ஒன்றில் வாழ்ந்தாலுங்கூட அங்கே குடியிருப்பதற்கு ஒருப்பட்டாலுங்கூட, அந்தக் குடிசைகளை மாற்றியமைப்பதிலே தான், எதிர்காலத்திலே அவர்களுக்குச் சமூதாயத்தில் ஒருமாற்றம் கிடைக்கும் என்பதை காந்தியடிகள் எடுத்துக் காட்டியதாகத் தெரியவில்லை; அப்படி வாதாடுகிற ஒரு கால கட்டம் அன்று பிறக்கவில்லை.

அதை நான் குற்றமாகச் சொல்லவில்லை. ஆனால் இந்தியாவில் சுதந்திரத்திலே மிகுந்த நாட்டத்தோடு பாடு

பட்ட காந்தியடிகளால் இதை எண்ணிப்பார்க்க முடிய வில்லே.

அதேபோல இந்தியாவிலே 17 ஆண்டு காலம் பிரதம ராக விளங்கிய பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், ஆசியாவினுடைய ஜோதி என்று பாராட்டப்பட்டவர்கள், இந்திய ஜனநாயகத்தினுடைய தந்தை என்று கருதப் பட்டவர்கள், அப்படிப்பட்ட நேரு அவர்கள், நாமெல் லாம் வழிபடுகிற ஆலயங்கள்—திருக்கோயில்கள்—ஆண்டவனுடைய சந்நிதானங்கள் இவை இவை என்று எண்ணிக் கொண்டிருக்கிருேமே இவை அல்ல. பாக்ரா நங்கலேப் போல மாபெரும் அணைக்கட்டுக்களும், ஏழை களேயும்—பாடுபடுகிற மக்களேயும் வாழ வைப்பதற்கான மிகப் பெரிய திட்டங்கள் நிறைவேறும் இடங்களுமே—நாம் வழிபட வேண்டிய திருக்கோயில்கள் என்று பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் உலகத்திற்கு எல்லாம் வழி காட்டக் கூடிய ஒரு கருத்தைச் சொன்ஞலுங்கூட, நேரு அவர்கள்கூட அந்தக் காலச் சூழ்நிலேயில் குடிசைகளே மாற்றியமைக்கிற ஒரு திட்டத்தை உருவாக்கித் தரவில்லே.

அதேபோல டாக்டர் அம்பேத்கார் அவர்கள், சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவன் படிக்க முடியுமா என்று கேள்வி கேட்கப்பட்ட காலத்தில், தாழ்த்தப் பட்டவன் படித்தாலும்கூட அவனே மதிக்க முடியுமா என்று கேட்ட சமுதாயத்தில், அவன் மதிப்பான பதவி யிலே இடம் பெற்ருலுங்கூட அவனே எங்களோடு வாழ விடமுடியுமா என்று கேட்டு விரட்டிய அந்தச் சமுதாயத் தில், அந்தச் சமுதாயத்தை எதிர்த்து புரட்சி நடத்துவதிலே தான் தாழ்த்தப்பட்டவன் வாழ முடியும் என்று நம்பிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள், தாழ்த்தப்பட்டவர் களுடைய தனிப் பெரும் வழிகாட்டி என்று பாராட்டப் பட்ட வரும் இந்த பம்பாய் மாநகரத்திலே தோன்றிய மாபெரும் அறிஞன் என்று போற்றக்கூடிய வருமான டாக்டர் அம்பேத்கார் அவர்கள், தனிமனிதன் ஒருவன்

எவ்வளவு விரிவான கல்வியைப் பெற முடியும் என்பதற்கு அடையாளமாகத் திகழும் டாக்டர் அம்பேத்கார் அவர்கள், அகில இந்தியாவுக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்ட போது, அந்த அரசியல் சட்டத்தை இயற்றுவதற்குத் தகுதி படைத்தவர் யார் என்று தேடிப் பார்த்தபொழுது, தமிழ் நாட்டிலே அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும், வேறு பல மாநிலத்திலே பல சட்ட நூல் வல்லுநர்களும் இருந்தாலும் கூட அவர்களை எல்லாம் விட மிகச் சிறந்த ஆற்றல் வாய்ந்தவர் டாக்டர் அம்பேத்கார்தான் என்று கருதப் பட்டு—பண்டித நேருவும், சர்தார் வல்லபாய் பட்டேலும், பாபு ராசேந்திர பிரசாத்தும் கேட்டுக் கொண்டு அந்த மாபெரும் பணியை ஏற்றுக்கொண்ட டாக்டர் அம்பேத் காரும் கூட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கை யிலே சமூதாயத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு, குடிசை யிலே வாழ்கிற நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்பதைப் பற்றி அவருடைய பெரும் பணிகளுக் கிடையே எண்ணிப்பார்க்க இயலாத நிலையில் அந்த அடிப்படையிலே எண்ணிப் பார்த்து எதையும் செய்ய வில்லை.

இன்னும் சொல்லப்போனல் தாழ்த்தப்பட்ட மக்களும் மனிதர்கள். அவர்களைத் தாழ்த்துகிறவர்கள் மனிதர் அல்லர். அவர்கள் காட்டுமிராண்டிகள். எவன் சாதியை நம்புகிருனே; எவன் சாதியினுலே தனக்கு உயர்வைத் தேடுகிருனே; அவன் புரோகிதனுக இருந்தாலும், அவன் ஆண்டவனை அர்ச்சிப்பதால் தனித் தகுதி பெற்றவன் என்று கருதப்பட்டாலும், அவன் சகல கலா வல்லவனுக இருந்தாலும் அவன்தான் என்னுடைய எதிரி. எனவே இந்த புரோகிதத்தை ஒழிப்பது மூலமாகத்தான் சமுதாயத்தை வாழவைக்க முடியும் என்று எடுத்துக் காட்டிய சுயமரியாதை இயக்கத் தந்தை பெரியார் அவர்

களும் கூட, இந்த தாழ்த்தப்பட்ட மக்களை வாழ வைப்பதற்கான ஒரு திட்டத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை.

சர்வோதயத் தலைவர்—அகில் இந்தியாவிலே சமதர்ம உணர்வுக்கு அடிப்படையான பொது நோக்கத்தை சர்வோதய இயக்கத்தின் மூலமாகத் தோற்றுவித்த பெருமதிப்பிற்குரிய சனநாயகக் காவலர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் ஏழை மக்களுடைய குடிசைகளை எப்படி மாற்றியமைக்கலாம் என்பது பற்றி எண்ணிப் பார்க்கவில்லை.

அவர்மீது நான் சொல்வது குற்றச்சாட்டு அல்ல, இந்தக் கோணத்தில் எண்ணிப் பார்க்க அவர்களுக்கு வாய்ப்பு இல்லை.

ஆனால் 67 ஆவது ஆண்டில் தமிழகத்தில் ஒரு மாபெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் சமுதாயத்திலே அடித்தளத்திலே இருக்கிற மக்கள் மானம் மரியாதையோடு வாழவேண்டுமானால்; நொந்துபோய்க் கிடக்கிற மக்கள் நிம்மதியாக வாழ்கிற ஒரு நிலைமை ஏற்பட வேண்டுமானால், அவர்களுக்கு இந்தச் சமுதாயமும் அரசாங்கமும் கடமைப் பட்டு இருக்கிறது. அரசாங்கத்தின் வருமானத்திலே ஒரு பகுதியை அந்த மக்களுக்காக ஒதுக்குவதிலேதான் சமநீதியை உருவாக்க முடியும் என்று கருதி, பேரறிஞர் அண்ணா அவர்கள் எரிந்து போகிற குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை மக்களுக்கு, அதுவும் எரிந்து போகிற குடிசைகளை நெருக்கமாகக் கட்டிக் கொண்டிருக்கிற 'சிலம்களாக' இருக்கிற அந்தப் பகுதியிலே குடியிருக்கும் மக்களுக்கு எரியாத வீடுகளாவது கட்டித்தர வேண்டும் என்ற ஒரு இயக்கத்தினைத் தொடங்கி 1,500 வீடுகளைச் சென்னையிலே கட்டித் தந்தார்கள்.

அது ஓராண்டு காலத்திலே நடைபெற்ற காரியம். அடுத்த ஆண்டு அறிஞர் அண்ணு அவர்கள் மறைய நேரிட்டது. இரண்டாண்டு காலத்திற்கு மேல் அண்ணு முதலமைச்சராக இருக்கவில்லை.

தமிழன் எல்லாவற்றிலேயும் ஏதாவது ஒரு வகையிலே இழப்புக்கு ஆளாகிக் கொண்டுதான் இருப்பான் என்பதற்கு இணங்க, தமிழர்களுடைய வரலாற்றிலே நிம்மதியாக ஒரு பத்தாண்டு காலம் செல்வதே கடினம் என்றிருக்கிற அந்தப் பரம்பரை நியதிக்கு ஏற்ப, பேரறிஞர் அண்ணு அவர்கள் இரண்டாவது ஆண்டு முதலமைச்சராக இருந்து அகில இந்தியாவும் பாராட்டுகிற ஒரு நிலைமையை ஏற்படுத்தி, வேறு பல மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கக் கூடிய நிலைமையைப் பெற்றபோது அறிஞர் அண்ணு அவர்கள் 69ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2ஆம் நாள் இரவு இயற்கை எய்தி விட்டார்கள்.

அப்படி அண்ணு மறைந்தற்குப் பின்னர் பொறுப்பேற்றுக் கொண்ட அறிஞர் அண்ணுவினுடைய தம்பி, பெரியாருடைய மாணவர், தமிழ் இனத்தினுடைய தொண்டர், எழுத்துத் துறையிலே வல்லமைமிக்க கலைஞர், அரசியலிலே விற்பன்னர், இன்றைய தமிழ் இனத்தின் தன்மானத்தின் சின்னமாக விளங்குகின்ற கலைஞர் அவர்கள் பெரும்பாலோர் விருப்பத்திற்கு ஏற்ப அந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, ஒரு இரண்டாண்டு காலம் ஆட்சி நடத்துவதற்குள்ளாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்தான் இந்த மனித சமுதாயத்திற்கே முதுகெலும்பாக இருக்கிறுர்கள்; அவர்கள் வாழ்வு நிமிராவிட்டால் தமிழ்ச் சமுதாயமே தலை நிமிராது என்ற எண்ணத்தோடு, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமானுல் குடிசைகளை மாற்றிக் கட்டிடங்களாக அமைக்க வேண்டும் என்று தீர்மானித்தார். ஏறத்தாழ சென்னை நகரத்திலே மட்டும்

குடிசைமாற்று வாரியம் என்ற அமைப்பின் மூலமாக 27, 000 குடிசை மாற்று வாரிய இல்லங்கள் கட்டி முடிக்கப் பட்டன, அடுத்த நான்காண்டு காலத்தில்.

சென்னை நகரத்திலே மட்டும் 27,000 இல்லங்கள். அந்த 27'000 இல்லங்களுக்காக செலவிடப்பட்ட தொகை மட்டும் ஏறத்தாழ பதினலு, பதினைந்து கோடி ரூபாய்.

இன்றைய தமிழக (அ. தி. மு. க.) அரசுக்கு வருமானம் வருவதுபோல வருகிற காலம் அல்ல அது. (இன்றைய தமிழக அரசுக்கு இரண்டு விதமான வருமானம் வருகிறது. ஒரு வருமானம் அரசாங்கம் மூலமாக வருகிற வருமானம்; இன்னொரு வருமானம் அரசாங்கம் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றுவதிலே இடையிலே செய்கிற பேரத்திலே ஆட்சியாளருக்கு வருகிற வருமானம்.)

எனவே அப்படிப்பட்ட வருமானம் இல்லாத அந்தக் காலத்தில் 15 கோடி ரூபாய் ஒதுக்கிச் சென்னை நகரத்திலே குடிசைகள் இருந்த பகுதிகளைக் கூடகோபுரங்களாக மாற்றிய பெருமை அகில இந்தியாவிலேயே கலைஞர் அவர்களுக்குத்தான் உரியது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

தாராவியை நினைக்கிற காரணத்தால் எனக்கு இந்த எண்ணங்கள் தோன்றின.

அதேபோல தமிழ்நாடு முழுவதும் பரவலாக கிராமங்கள்தோறும் குடியிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வளிப்பதற்காக ஏறத்தாழ 35,000 வீடுகள் கட்டப்பட்டன. ஒரு வீட்டில் கணவன்—மனைவி—குழந்தைகள், ஒருவேளை அவர்களுடைய வயதான பெற்றோர் இப்படி ஐந்தாறு பேர்கள் இருக்கக்கூடிய சிறுசிறு வீடுகள்·

சிறு வீடுகள்தான். ஆனல் கல் கட்டிடமாக, சிமிண்டு கட்டிடமாக, வெள்ளத்திலே போகாததாக வெந்தீயிலே வேகாததாக, பனியும்—குளிரும் உள்ளே புகாததாக,

காற்றடித்தால் கூரை கலைந்து ஓடாததாகக் கட்டப்பட்ட வீடுகள், ஏறத்தாழ 35,000 வீடுகள் தமிழகத்திலே கட்டப்பட்டன.

மராட்டிய மாநிலத்தினுடைய வீட்டுவசதி வாரியத் துறை அமைச்சர் மட்டுமே எண்ணினால் முடியும் என்று நான் கருதாவிட்டாலுங்கூட மராட்டிய மண்டலத்திலே— அதுவும் பம்பாய் நகரத்திலே இந்த நகரத்தினுடைய எழில் குன்றாமல் இருப்பதற்காக அப்படிப்பட்ட பணி தொடங்கப்பட வேண்டும். கடந்த பத்து ஆண்டு காலத்திலே மட்டும் பம்பாய் நகரம் இருமடங்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது.

கடலையே தூர்த்து வானளாவிய கட்டிடங்களைக் கட்டுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. கோடீஸ்வரருடைய பூமி என்று பெயர் பெற்றிருக்கிறது. மராட்டிய மன்னன் சிவாஜியை எண்ணிப் பார்த்தால் இந்தக் குபேரர்களைப் பார்க்கிற பொழுது, ஏழையாகத்தான் எனக்குத் தெரிகிறார்கள்.

எனவே அந்த அளவிற்குக் குபேரர்கள் வாழ்கிற இந்தப் பூமியில், மராட்டிய மண்ணில், ஏறத்தாழ 80 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்ற பெருமை பெற்ற இந்தப் பெரும் நகரில், இன்னொரு 10 ஆண்டு காலத்தில் ஒன்றேகால் கோடி மக்கள் வாழக்கூடிய அவசியம் ஏற்பட்டு விடக்கூடிய இந்தப் பெருநகரில் இப்பொழுதுள்ள போக்குவரத்தெல்லாம் போதாது என்று சொல்லக்கூடிய கால கட்டத்தை நெருங்கக்கூடிய இந்தப் பம்பாய் நகரத்தில், எல்லா மக்களையும் வாழ வைத்திட செய்யப்படுகிற ஒரு கடமையாக, குடிசைகளை மாற்றிக் கல்கட்டிடங்களாக அமைத்து, அந்தக் குடிசைகளிலே வாழ்ந்த மக்களை, வீடுகளிலே வாழச்செய்கிற பணியைத் தமிழ் நாட்டிலே கையாளப்பட்ட அந்த முறையில் இங்கே உள்ள இந்த அரசும் மேற்கொள்ள வேண்டும். அதன்

மூலமாக தாராவி ஒரு பெரும் மாற்றம் காண வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே நடைபெற்ற அந்தக் குடிசை மாற்று வாரியக் கடமையை ஜெயப்பிரகாஷ் நாராயணன் பாராட்டினர்; பாபு ஜெகஜீவன்ராம் பாராட்டினர்; அதேபோல பீகார் மாநிலத்தைச் சேர்ந்த-போலோபஸ்வான் சாத்திரி தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த தலைவர்-மத்திய அமைச்சராக இருந்தபோது பாராட்டினர்; வேறு பல முற்போக்குவாதிகள் பாராட்டினர்கள்.

பிரதமர் இந்திரா காந்தியும்கூட அந்தக் கட்டிடங்களைப் பற்றி ஒருமுறை பாராட்டு தெரிவித்தார்கள்.

வேறு சில பேர் வெளிப்படையாகப் பாராட்டவில்லை எனில், அவர்கள் பாராட்டினல் வேறு எங்கேயோ கொண்டு போய் விட்டுவிடுமோ என்ற அச்சத்தால் பாராட்டவில்லையே தவிர, வேறு காரணம் இல்லை. அதைப் பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டினர்கள்.

சென்னை நகரத்தினுடைய வளர்ச்சியிலே அது ஒரு தனிப்பங்கு வகிக்கிறது. ஏழை மக்களுக்கு வாழ்வளிப்பதிலே பெரும் பங்கு வகிக்கிறது என்பதை நான் நினைவூட்டுகிறேன்.

இன்றைக்கு அதே காரியம் தொடர்ந்து நடைபெறுகிறதா என்று நீங்கள் கேட்பீர்கள். நான் அதற்குப் பதில் சொல்ல முடியாது.

அந்தக் காரியங்கள் எல்லாம் கலைஞர் செய்த காரணத்தால் இனியும் தொடரக்கூடாது என்று பெரும்பாலும் கைவிடப்பட்டிருக்கின்றன.

அந்தக் காரியங்கள் இன்றைக்கு நடைபெறவில்லை.

அந்தக் காரியங்களைத் தொடர்ந்து நடத்துவதே தவறு என்ற ஒரு எண்ணம் கூட இன்றைய (அ.இ.அ.தி.மு.க.) ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அவர்களுக்கு (அ.இ.அ.தி.மு.க.) அந்த எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. ஆனல் தெளிவுள்ளவர்களுக்கு இவர்கள் ஆட்சி நடத்துவதே தவறு என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது.

எனவே அப்படியொரு நிலைமையிலே தமிழகம் இன்றைக்குத் தத்தளித்தாலுங்கூட, இந்த அடிப்படையான உணர்வு இந்தியச் சமுதாயத்திற்குத் தேவை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணு அவர்களுடைய பெயரால் 'அறிஞர் அண்ணு அறிவாலயம்' என்னும்–மக்களுக்குப் பயன்தரக்கூடிய பல்வேறு பணிகளை நிறைவேற்றக்கூடிய ஓர் அமைப்பை பம்பாய் நகரத்திலே ஏற்படுத்துவதிலே நம்முடைய நண்பர்கள் மிகுந்த ஈடுபாடுடையவராக இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

மிகப்பெரிய தத்துவஞானிகள் — சிந்தனையாளர்கள் உலகத்தையே ஒரு குடும்பமாக எண்ணக் கூடியவர்கள் தான் ஏழைகளைப் பற்றிக் கவலைப்படுவார்கள்.

பேரறிஞர் அண்ணு அவர்கள் ஏழைகளைப் பற்றித் தெரிவித்த கருத்து—'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற கருத்து சமுதாயத்தினுடைய கண்ணேட்டத்தையே மாற்றியமைக்கக் கூடிய கருத்தாக அமைந்தது.

செல்வர்களிடத்திலே சிரிப்பு எப்போதும் இருக்கக் கூடும். நடுத்தர நிலையிலே வாழ்கிற மக்களிடத்திலே கூடச் சிரிப்பு ஏற்படக்கூடும். மிக ஏழைகளாக இருக்கக் கூடிய மக்களிடத்திலே இருக்கிற வேதனையை எண்ணிப் பார்க்கக்கூடிய எந்த ஒரு அரசியல்வாதியும் சனநாயக வாதியாக இருந்தாலும், சமதர்மவாதியாக இருந்தாலும், பொதுவுடமைவாதியாக இருந்தாலும், பொதுத் தொண்டு

ஆற்றுகிற யாராக இருந்தாலும், (சுதந்திரம் பெற்றிருக்கிற ஒரு நாட்டில் ஏழைகளுடைய மனத்தில் ஒரு நிறைவு—மகிழ்ச்சி இவற்றை ஏற்படுத்துவதிலேதான் சனநாயகம் வெற்றி பெற முடியும் என்பதை ஏற்கத்தான் செய்வர்.)

அறிஞர் அண்ணு அவர்கள் அந்த உணர்வோடுதான் தன்னுடைய இலட்சியத்தை அமைத்துக் கொண்டார்கள்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்; அந்த முயற்சிக்காக என் வாழ்நாளைச் செலவிடுவேன் என்னும் கொள்கையோடுதான் அண்ணு செயற்பட்டார். நம்முடைய தி. மு. கழகம் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலேயும் சரி; அதற்கு முன்னுலே திராவிடர் கழகத்திலே அறிஞர் அண்ணு அவர்களும், நானும், கலைஞர் அவர்களும் நம்முடைய கழகத்தினுடைய முன்னணித் தோழர்களாக உள்ள பலரும் இடம் பெற்றிருந்த அந்தக் காலத்திலேயும் சரி; அதற்கு முன்னுலே தந்தை பெரியார் அவர்கள் நீதிக் கட்சியினுடைய தலைவராகவும் அறிஞர் அண்ணு அவர்கள் அந்த நீதிக்கட்சியினுடைய செயலாளராகவும் இருந்த காலத்திலும் சரி, இந்தக் கண்ணேட்டத்திலே தான் நீதிக் கட்சி—திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை செயல்பட்டு வந்திருக்கின்றன என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோற்றத்தைப் பற்றி கடந்த முறை இங்கு வந்தபோது, 78-ஆம் ஆண்டு பம்பாய் நகரத்திலே பேசிய கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கிருர்கள்.

ஒரு அரசியல் இயக்கத்தினுடைய வரலாறு என்று கூறுகிறபோது 1949ஆவது ஆண்டு அறிஞர் அண்ணு தி. மு. கழகத்தைத் தோற்றுவித்தபோதுதான் நாங்கள் உருவானேம் என்று நீங்கள் கருதலாம்.

ஆனால் இந்த அரசியல் இயக்கத்தினுடைய வித்தாக இருக்கின்ற கருத்துக்கள் தான் இவை. (நாமெல்லாம் திராவிடர்கள்; நம்முடைய பண்பாடு திராவிடப் பண்பாடு; நம்முடைய திராவிட மொழிகளெல்லாம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த—மூலமொழியாக இருந்த மொழி நம்முடைய தமிழ் மொழி. அந்த மொழிக்குச் சொந்தக்காரர்களாகிய நாம் இன்றைய தினம் அந்த உணர்வு இழந்து இருக்கிறோம்; அதைப் போற்றத் தவறி இருக்கிறோம்; பிறமொழி ஆதிக்கத்திற்கு இடம் தந்திருக்கிறோம்; தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றுகின்ற திறனற்று இருக்கின்றோம். தமிழ் நாகரிகம் எது என்று அறியாதவர்களாக இருக்கிறோம்.)

இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத் தான் நீதிக்கட்சிக்கே கூட, திராவிடர் இயக்கம் என்ற உணர்வை ஏற்படுத்தத் தக்கவகையில் 1944-ஆம் ஆண்டு இறுதியில் "திராவிடர் கழகம்" என்று பெயர் சூட்டப் பட்டது.

அதற்கு முன்னலே பிறந்த நீதிக்கட்சி இயக்கத்தை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நீதிக் கட்சியைத் தோற்றுவித்த சர். பி. தியாகராய செட்டியார் என்ற பெரியவர் அவர்தான் சென்னை மாநகராட்சி தோன்றுவதற்கு முன்னால், சென்னை நகரத்தினுடைய உள்ளாட்சி அமைப்பு முறையினுடைய—நகர சபையினுடைய முதல் வெள்ளையர் அல்லாத தலைவராக விளங்கியவர். The First Indian President of Madras City என்ற பெருமைக் குரியவர்.

அதுவரையில் வெள்ளைக்காரர்கள்தான் சென்னை நகரத்தினுடைய தலைவர்களாக இருப்பார்கள். அப்படி விளங்கிய தியாகராயர் துவக்கத்தில் காங்கிரஸ் இயக்கத்திலே ஈடுபட்டிருந்தவர்; தேசிய இயக்கத்தை எதிர்த்தவர் அல்ல.

ஆனால் தேசிய இயக்கத்திலே ஈடுபட்டிருந்தாலுங்கூட சென்னை மாநிலத்திலே தேசிய இயக்கம் என்பது ஒரு சாரார் கையிலே சிக்கிவிட்டது என்ற உணர்வோடு—அந்த இயக்கத்தின் மூலமாகச் செல்வாக்கைப் பெறக் கூடியவர்கள் பின் தங்கியவர்களாக இருக்க மாட்டார்கள், சமுதாயத்திலே அடித்தட்டு மக்களுக்கு ஆதரவு தருகிறவர்களாக இருக்க மாட்டார்கள் என்று கருதி, (ஒரு தனி இயக்கம் தேவை என்ற குரல் எழுப்பி பின்தங்கிய மக்கள் சார்பாக 1917இல் நீதி கட்சியை உருவாக்கினர்.)

அந்தக் காலத்திலே அவருக்கு உறுதுணையாக இருந்தவர் அறிஞர் டி. எம். நாயர். அவரும் காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தவர்தான்.

காங்கிரஸ் இயக்கத்தை ஒரு காலத்திலே ஹியூம் என்ற வெள்ளையர் ஆரம்பித்தபோது, இந்தியாவிலே வாழ்கிற மக்கள் வெள்ளைக்கார அரசாங்கத்தோடு ஒத்துழைத்து—அப்படி ஒத்துழைக்கிற காலத்தில் வெள்ளைக்கார அரசாங்கத்திடமிருந்து ஆட்சி அதிகாரத்தில் பெற வேண்டிய பங்கினை இந்திய மக்களுக்குப் பெற்றுத் தருவதற்காகத்தான் காங்கிரஸ் கட்சியே தோன்றியது.

அதே முறையிலே தியாகராயரும் டாக்டர் டி. எம். நாயரும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த டாக்டர் நடேசன் அவர்களும் சமுதாயத்தினுடைய அடித்தட்டு மக்களுக்காகக் குரல் எழுப்புகிற இயக்கமாக அதை உருவாக்கி, "சவுத் இந்தியன் லிபரல் பெடரேஷன்" என்று ஆங்கிலத்திலே பெயரிட்டு, "ஜஸ்டிஸ்" என்ற பெயரில் பத்திரிகை நடத்திய காரணத்தால் "ஜஸ்டிஸ் கட்சி" என்ற பெயர்வந்து—அது மொழி பெயர்க்கப்பட்ட காரணத்தால் நீதிக் கட்சி என்ற பெயர் வழங்கப்பட்டு அந்த இயக்கத்தினுடைய பத்திரிகை 'திராவிடன்' என்று இருந்த காரணத்தால் அது திராவிடர் இயக்கம் என்று கூட அழைக்கப்படக் கூடிய நிலைமை இருந்தது.

அதை நான் இங்கே குறிப்பிடுவது அந்த இயக்கம் தொடங்கிய காலத்திலே இருந்து தீண்டாமை கொடுமைக்கு முடிவு கட்டுகிற கடமைகள் தமிழ்நாட்டிலே தோன்றின.

தீண்டத் தகாதவர்கள், தாழ்த்தப் பட்டவர்கள். பொதுக் கிணற்றிலே தண்ணீர் எடுக்கக் கூடாது என்றிருந்த நடைமுறை மாற்றப்பட்டது.

தீண்டத்தகாதவர்கள், பள்ளிக்கூடத்திலே சேர்க்கப் படக்கூடாது என்றிருந்த கேடு கைவிடப்பட்டது.

நடுத்தெருவிலே, தீண்டப்படாதவர்கள் நடக்கக் கூடாது என்றிருந்த தடை நீக்கப்பட்டது.

நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்த 1921–ஆம் ஆண்டுக்கு முன்னால் வரையிலே பொதுக் கிணற்றிலே தீண்டத்தகாதவன் தண்ணீர் எடுத்தால் அரசாங்கமே கூடத்தண்டிக்கிற ஒரு நிலை இருந்தது.

பொதுச்சாலையிலே தீண்டப்படாதவன் நடந்தால் அது குற்றமென்று எல்லோரும் ஒப்புக்கொள்கிற ஒரு கட்டம் இருந்தது. அந்த நிலைமையை நீதிக்கட்சி மாற்றியது.

அதேபோல அரசாங்க உத்தியோகங்களிலேயெல்லாம் "படித்தசாதி"யைச் சேர்ந்தவர்கள் பரம்பரையாக அனைத்து இடமும் பெற்று வந்த முறையை மாற்றியது, அதுவரையில் படிக்காத வகுப்பைச் சார்ந்தவர்கள் யார் படித்தாலும் அவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் இடம் பெறலாம் என்று சட்டம் வகுத்தது. அதற்காக பிராமணர்களுக்கு இவ்வளவு இடம், பிராமணரல்லாதாருக்கு இத்தனை இடம், இஸ்லாமியத் தோழர்களுக்கு இவ்வளவு இடம், கிறிஸ்தவர்களுக்கு இவ்வளவு இடம், தாழ்த்தப் பட்டவர்களுக்கு இவ்வளவு இடம் என்று ஒரு சமூக நீதி (சோஷியல் ஜஸ்டிஸ்) (நீதிக்கட்சி ஆட்சிக்காலத்திலே)

தான் 1928-ஆம் ஆண்டில் முதன்முதலாக கம்யூனல் ஜி. ஓ. பிறப்பித்ததன் மூலம் கொண்டுவரப்பட்டது.

அப்படி 1928-ஆம் ஆண்டிலே வந்தாலுங்கூட, 1978ஆம் ஆண்டிலேகூட அதற்கு எதிர்ப்பு இருக்கிறது, எந்தெந்த வடிவிலோ எதிர்ப்பு தலை தூக்குகிறது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

1947-ஆம் ஆண்டில் இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்ததற்குப் பின்னுலே 1950இல் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தின் பெயராலேயே உயர்நீதி மன்றத்திலே தொடுக்கப்பட்ட வழக்கின் மூலம் கம்யூனல் ஜி. ஓ. வீழ்த்தப்பட்டது.

அந்த கம்யூனல் ஜி. ஓ. வீழ்த்தப்பட்ட நேரத்தில் தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணவும் அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்து தமிழ் நாட்டிலே ஒரு போராட்டத்தைத் தொடங்கியதால் அந்த உணர்வுகளைப் பெருந்தலைவர் காமராசர் புரிந்துகொண்ட காரணத்தால்—அந்த உணர்வுகளை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களிடம் எடுத்துச்சொல்லி பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோர்க்குரிய உரிமைகள் பறிக்கப்படக் கூடாது, அரசு உத்தியோகத்திலேயும் அவர்களுக்குரிய இடங்கள் ஒரளவாவது ஒதுக்கப்பட்டாக வேண்டும் என்று கேட்டு, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒப்புக் கொண்டு, அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வரப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 100-க்கு 15 இடங்கள், பின்தங்கியவர்களுக்கு 100-க்கு ஏறத்தாழ 24 இடங்கள் என்று ஒரு வரையறை செய்து 'கம்யூனல் ஜி. ஓ. இன் ஏ டிபரண்ட் பார்ம்' என்று சொல்லத்தக்க வகையிலே அந்தப் பாகுபாடு-சென்னை மாநில அரசால் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

அகில இந்தியாவிலேயும் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில்-பின் தங்கியவர்களுக்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்காக, (அவர்களுடைய சுயமரியாதைக்காக, இன உரிமைக்காக, பாதுகாப்புக்காக, கல்விக்காக முதல் முதல் வழிகாட்டிய நீதிக்கட்சி வழியில், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணு வழியில், வந்த ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.)

அகில இந்தியாவில் பல பகுதிகள் அமைதியற்று கலவரப் பகுதியாக இருந்த காலத்தில் அமைதியான முறையில் இரட்டை ஆட்சி நடத்திக் காட்டிய பெருமை, அன்றைய சென்னை மாநிலத்திற்கும் நீதிக்கட்சிக்கும்தான் உண்டு.

சென்னை மாநிலம் 'மெட்ராஸ் பிரசிடென்ஸி' என்று அழைக்கப்பட்ட மாநிலமாகும். அந்த மெட்ராஸ் பிரசிடென்ஸியிலே ஆந்திரத்தினுடைய பெரும்பகுதி அடங்கி இருந்தது. கேரளத்திலே ஒரு பகுதி சேர்ந்திருந்தது. கர்னுடகத்திலே ஒரு பகுதி உள்ளடங்கி இருந்தது.

அந்தப் பகுதி ஏறத்தாழ திராவிடத்தினுடைய முழுத் தன்மை கொண்ட பகுதியாக இருந்தது. திராவிடம் என்று நான் சொல்லுகிறபோது, திராவிடப் பண்பாடு-திராவிட நாகரிகம் என்ற அடிப்படையிலேதான் சொல்லுகிறேன். இது வெறும் அரசியலுக்காக மட்டுமல்ல.

"இந்தியாவில் வாழ்கிற மக்களில், விந்திய மலைக்குத் தெற்கே வாழ்பவர்களில் பெரும்பாலான மக்கள்-திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்-இந்தியாவினுடைய வரலாற்றிலே பெரிதாகப் பாராட்டிச் சொல்லப்படுகிற ஆரிய இனக் கலாச்சாரத்தோடு, தென்னுட்டிலே வாழ்கிற திராவிட இன மக்களுக்கு எந்தக் காலத்திலும் மிக நெருக்

கமான உறவில்லை! அந்தக் கலாச்சாரத்தாலே, தென்ஞட்டு திராவிடக் கலாச்சாரம் அதில் கலந்து மூழ்கி விடவில்லை.

அந்த தென்ஞட்டுக் கலாச்சாரத்தை முற்றும் மறைத்துவிடக்கூடிய ஆற்றல் வேதத்திறகோ, ஆகமத்திற்கோ, புராணத்திற்கோ, சாஸ்திரத்திற்கோகூட இல்லை; சமஸ்கிருத மொழியாலே பரவிய அந்தக் கலாச்சாரம்—அந்தக் கலாச்சாரத்தின் பெயராலே புரோகிதர்களுக்குக் கிடைத்த செல்வாக்கு - இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாக ஒரு தனித்தன்மை உடையதாக - ஒரு பெருநோக்குடையவர்களாக வாழ்கிற சமுதாயத்தார் தென்ஞட்டிலே இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள் - **"இன்றைக்கும் திராவிட நாகரிகம் என்கிற அந்தப் பழம் பெருமையைக் காப்பாற்றுகின்ற சமுதாயமாகத்தான் தென்ஞட்டு மக்கள் எனக்குத் தென்படுகிருர்கள்"** என்று சுவாமி விவேகானந்தர் அவர்களே தெரிவித்திருக்கிருர்கள்.

அப்படி விவேகானந்தரே சிறப்பித்துச் சொல்கிற அளவுக்குக் திராவிடப் பண்பாடு இன்றுங்கூடக் காப்பாற்றப்படுகிறது.

திராவிடக் கலை-நாகரிகம்-சிற்பம்-மொழி அத்தனையும், முழுமையும், அழிக்கப்படாமலும் அழிந்து விடாமலும் விட்டு வைக்கப்பட்டிருக்கிற திராவிட மொழி இலக்கியங்கள் என்று சொல்லப்படும் பழந்தமிழ் இலக்கியங்களைப் பெற்றிருக்கிற பெருமைக்குரிய அந்தத் திராவிடத்தின் பெரும் பகுதி ஒரு காலத்தில் மெட்ராஸ் பிரசிடென்சியாக இருந்தது.

தமிழ்நாடு - ஆந்திரம் - கேரளம் - கர்ஞடகம் இவை நான்கும் மொழியிலே முழுவதும்' திராவிடமாக இன்றைக்குங்கூடக் காணப்படுகின்றன.

ஆனல் மராட்டியம், கூர்ஜரம், கலிங்கம் என்று அழைக்கப்பட்ட ஒரிசா இவையெல்லாம்கூட ஒரு காலத்திலே திராவிடத்திலேதான் இருந்தன.

திராவிடத்திலே இருந்தது என்ருல் - அறிஞர் அண்ணுவின் கையிலே இருந்தது என்று பொருளல்ல; அல்லது நாங்கள் ஆட்சி நடத்த வேண்டிய இடம் என்றும் பொருளல்ல, அரசியல் பாகப்பிரிவினைக்கு அது வரையிலே எல்லைக்கோடு என்றும் பொருளல்ல;

(ஒரு கலாச்சாரத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகத்தான் இதனைக் குறிப்பிடுகிறேன்;)

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுலே எழுதப்பட்ட வடமொழி ஏடுகளில்–சமஸ்கிருத ஏடுகளில்–'பஞ்ச திராவிடம்' என்று குறிப்பிடப்படுகிறது.

'பஞ்ச திராவிடம்' என்ருல் ஐந்து கூருக இருக்கிற திராவிடம் என்று பொருள்.

அந்த ஐந்து கூருக இருக்கிற திராவிடம் எது - என்று கேட்டால், திராவிடம்–ஆந்திரம்–மராட்டியம்–கூர்ஜரம் கலிங்கம் என்று சொல்லப்படுகிறது.

கலிங்கம் என்பது ஒரிசா, ஏறத்தாழ ஆந்திரத்தினுடைய சாயலைப் பெற்றது.

கூர்ஜரம் என்பது மராட்டியத்தினுடைய சாயலைப் பெற்றது.

மராட்டியம் என்பது ஏறத்தாழ திராவிடம்–ஆரியத் தாக்கத்தால்–மொழி வழியில் முற்றும் திரிபடைய நேரிட்ட பகுதி. அன்றைய ஆந்திரத்தில் சேர்ந்து எண்ணப்பட்டது கர்னுடகம். திராவிடம் என்று கூறப்பட்ட பகுதி–மலையாளம் தனிமொழியாக வடிவுபெருத காலத்திருந்து செந்தமிழும் கொடுந்தமிழும் வழங்கிய தமிழ்நிலம்.

கேரளத்திலே 400 ஆண்டுகளுக்கு முன்பு மலையாள மொழி என்ற ஒரு தனிமொழியே கிடையாது. 350 ஆண்டு களாகத்தான் மலையாளம் தனிமொழியாக வடிவம் பெற்று வழங்கி வருகிறது.

இன்றைக்கும் கூட ஒரு மலையாளி பம்பாயிலே மலையாளம் பேசினால், அது அங்கிருக்கிற தமிழனுக்கு நன்றாகப் புரியும்.

இங்கே இருக்கிற தமிழன்–மலையாளி இருவருமே அதிக வேற்றுமையில்லாமல் பேசிப் பழக முடியும்,

தமிழ்நாட்டிலேதான் மலையாளி பேசுவது எங்களுக் குப் புரிவதில்லை. தமிழ் நாட்டிலே எங்களுக்குப் புரியாத தற்குக் காரணம், மலையாளத்தினை உச்சரிப்பதில் ஒலி வேற்றுமையடைந்து பிரிந்திருப்பதுதான்!

அதேபோல ஆந்திராவில் இருப்போர் பேசும் தெலுங்கும், கர்நாடகாவிலிருப்போர் பேசும் கன்னட மும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே முழுவடிவு பெறா மல் ஏறத்தாழ ஒன்றாக இருந்தது,

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் கன்னடம் தனி வடிவம் பெற்றது. அம்மொழி தமிழ் – திராவிடச் சொற் களின் வேர்களை அப்படியே பெற்றிருப்பது.

தெலுங்கு மொழிதான் ஓரளவு திரிந்து கொஞ்சம் வேறுபட்டிருக்கிறது.

ஆனால், 'பஞ்சதிராவிடம்' என்று இலக்கியங்களிலே குறிப்பிடப்பட்ட இந்தப் பகுதிகளுக்கு, ஏன் அப்படி 'பஞ்ச திராவிடம்' ஐந்து திராவிடம் என்று பெயர் வைத் தார்கள் என்றால், ஆரிய கலாச்சாரத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளாத பகுதி என்ற காரணத்தாலேதான் அப்படிப் பெயரிட்டுக் குறிப்பிட்டார்கள்.

இந்தியாவினுடைய வரலாற்றில் அரசியல் வரலாற்றை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துக்கொண்டு—மொழி வரலாறு, இலக்கிய, கலாச்சார வரலாறு, சமய வரலாறு, என்று எண்ணிப் பார்த்தால் மெல்ல மெல்ல சினிமாவில் ஓடுகிற படத்தில் ஒளி அலைகள் பாயும்போது எப்படி நம் கண்ணுக்கு மெல்ல அவை அசைவது போலத் தெரியுமோ, அதுபோல ஆரியக் கலாச்சாரம் மெல்ல மெல்ல இந்தியாவினுடைய சிந்து நதிக்கரையிலே தொடங்கி கங்கை நதிக்கரை வரையிலே பரவிய அந்தக் காலக் கட்டத்தில் ஆரிய நாகரிகம் பரவுகிற போது அந்த அலை பாயப் பாய எதிர் அலைகளாலே தாக்கப்பட்டு, அந்த எதிர் அலைக் கருத்துக்கள் ஆக்கம் மிக்க கருத்துக்களாக இருந்ததால் - பழங்குடி மக்களுடைய கருத்துக்கள் வல்லமை மிகுந்ததாக இருந்த காரணத்தால், அவற்றை ஆரியம் புறக்கணிக்கவும் முடியாமல் – ஜீரணிக்கவும் முடியாமல் – உண்டு ஏப்பம்விட முடியாமல் தோற்றது. அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டுதான் ஆரியமே புதுவடிவம் பெற்றது என்று இந்தியாவிலே தோன்றிய சமஸ்கிருத வேதத்தை – சமஸ்கிருத ஆகமங்களை – உபநிடதங்களை – சமஸ்கிருதத்திலே பிறந்த புராணங்களை– மகாபாரதத்தை – பகவத் கீதையை - ராமாயணத்தை எல்லாம் ஆராய்ந்த சர் ஜான் மார்ஷல், மாக்ஸ் முல்லர் போன்ற மிகச் சிறந்த அறிஞர்களும், சமஸ்கிருதத்திலே இருந்து ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்ட ஏடுகளையெல்லாம் ஆராய்ந்த அறிஞர் பெருமக்களும் தெரிவித்திருக்கிறார்கள்.

வேதகாலத்து ஆரியர்களைவிட - வேதகாலத்திய ஆரியர்களுடைய நாகரிகம் என்று அவர்களுடைய தெய்வ வழிபாட்டு முறைகள் என்று எழுதி வைக்கப்பட்டுள்ள ஏடுகளிலே காணப்பட்ட கருத்துக்களைவிட அதற்குப் பின்னர் பிறந்த உபநிடதங்களிலே உள்ள

எத்தனையோ கருத்துக்கள் வேதக் கருத்துக்களிலிருந்து மாற்றம் பெற்றிருக்கின்றன.

அந்த உபநிடதங்களுக்குப் பின்னாலே பிறந்த ஆகமங்களிலே உள்ள கருத்துக்கள் மேலும் மாறி இருக்கின்றன.

வேதகாலத்திலே 'ஒரு முழுமுதற் கடவுள்' என்று கருதும் தத்துவம் அவர்களுக்குத் தெரியாது. 'தேவர்களைத்தான்' தெரியும். அந்தத் தேவர்களையெல்லாம் எப்படித் திருப்திப்படுத்துவது என்றுதான் ஆரியர்கள் கருதினார்கள் என்று வரலாற்றிலே காணப்படுகிறது என்றால், வேள்விகள் செய்யவேண்டும் - அந்த வேள்வி என்பதைத் தமிழிலே 'முத்தீ' மூன்று விதமான தீ என்று சொல்வார்கள் - அந்தத் தீயை வளர்த்து, யாகம் செய்து, அவிர்ப்பாகம் செய்து - "இந்திரனே வருக! அக்னி தேவனே வருக! வருணனே வருக! வாயுவே வருக! நாங்கள் தருகிற உணவை உண்க! இந்த சோமபானத்தை நீங்கள் பருகுக! இவற்றையெல்லாம் பருகி நீங்கள் எங்களையெல்லாம் ஆசீர்வதிக்க!" என்பார்கள்.

இதோடுமட்டும் நின்று விடாது.

ஆரிய வேதங்களான ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்பவைகளிலே வருகிற கருத்துக்கள் 'ஓ இந்திரனே! ஆற்றல்பெற்ற இந்திரனே! உன் பேராற்றலை எங்களுக்குத் துணையாகத் தந்து நாங்கள் என்றைக்கும் அஞ்சி அஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கிறோமே, அப்படி அஞ்சி அஞ்சி வாழ்வதற்குக் காரணமாக இருக்கிற எங்களுடைய எதிரிகளாக இருக்கின்ற 'தஸ்யூக்களை' - எங்களுடைய எதிரிகளான திராவிடர்களை - எங்களுடைய எதிரிகளாக இருக்கின்ற ஆரியர் அல்லாதாரையெல்லாம் அழிப்பதற்கு, தேவனே! நீ வந்து எங்களுக்குத் துணை செய்வாயாக!', என்று வேண்டுவார்களாம்.

அப்படி ஆரியர்கள் அச்சத்தோடு வாழ்ந்தது அந்தக் காலம். அச்சத்தோடு வாழ்ந்த அவர்களிடம் தத்துவச் சிந்தனை என்பது பிறக்கவில்லை; அப்படிப்பட்ட கருத்துக்கள் இடம்பெறவில்லை.

(எந்தவிதமான உயர்ந்த தத்துவ உணர்வும் அவர்களுக்குக் கிடையாது-தப்பிப் போகிற உணர்வு இருந்ததே தவிர, தத்துவ உணர்வு-தீவிர சிந்தனை-ஆழமான கருத்துக்கள் இடம் பெருமல் இருந்தார்கள்.)

"அக்காலத்தில் அவர்கள் சாதாரணமாக ஒரு போராட்ட வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவர்கள் காட்டுப் பகுதியிலே வாழ்ந்தார்கள், ஆனல் அவர்கள் எந்த இடத்திலே வந்து வாழத் தொடங்கினர்களோ, அந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கிற பழங்குடி மக்கள்-மொகஞ்சதாரோ ஹாரப்பா போன்ற அகழ்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில்-ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னலே வாழ்ந்து கொண்டிருந்த மக்கள்-ஆரியர்களது வருகைக்கு முற்பட்டே நாகரிகத்தோடு திகழ்ந்த மக்கள்-அந்தக் காலத்திலேயே எழுத்துக்களை எழுதுவதற்கு அறிந்திருந்த மக்கள்-தங்களுடைய சிந்தனைகளையெல்லாம் எழுதி வைத்தவர்கள்-கோல எழுத்து, வட்டெழுத்து முறைக்கு முன்னலே ஓவிய எழுத்து என்ற எழுத்து முறைகளைப் பயன்படுத்தியவர்கள்-சிற்பங்கள் வடித்தவர்கள்-அழகழகான கட்டிடங்களைக் கட்டியவர்கள்-மக்களுடைய வசதிக்கேற்ப நகரங்கள் அமைத்துக் கொண்டவர்கள், வீசும் குளிர் காற்றையே தடுக்கும் வகையில் மதிற்சுவர்களைக் கட்டி, அவற்றையே நகரமாக்கிக் கொண்டவர்கள்-தண்ணீர் ஓடுவதற்கான கால்வாயை 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னலேயே வெட்டியவர்கள்-சாக்கடைகள் அமைத்து சுகாதார வாழ்வு வாழ்ந்தவர்கள்; இவ்வளவு வசதிகளும் செய்துகொண்ட சூழ்நிலையிலே வாழ்ந்த மக்கள்தான், ஆரியர்களுக்கு முன்னலே வாழ்ந்த திராவிட மக்கள். இந்தோ-ஆரியன்

மக்களுக்கு முற்பட இங்கே வாழ்ந்த மக்கள். சுமேரிய மக்களோடு தொடர்புடையவர்களாக-மெசபடோமிய மக்களோடுஎகிப்து நாட்டு மக்களோடுதொடர்புடையவர் களாக-குமரிமுனை மக்களோடு தொடர்புடையவர்களாக வாழ்ந்த மக்கள்தான்-இன்றைய பாகிஸ்தான் பகுதியிலே இருக்கிற மொஹஞ்சதாரோ-ஹரப்பா-இன்னும் சில நகரங்களிலே அன்றைக்கு வாழ்ந்திருந்த மக்கள் என்று ஈராஸ் பாதிரியார் போன்ற பேரறிஞர்கள் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னலே ஆராய்ச்சி செய்து எடுத்துக் காட்டி இருக்கிருர்கள்.

செக்கோஸ்லோவேகியா நாட்டு அறிஞர்களும், ரஷ்ய புரட்சி அறிஞர்களும், நார்வே-ஸ்வீடன் நாட்டு அறிஞர்களும் அந்த மொஹஞ்சதாரோ-ஹாரப்பாவில் காணப்படும் எழுத்துக்களைப் பற்றியும், கட்டிடங்களைப் பற்றியும் இன்றைக்கும் தொடர்ந்து ஆராய்கிருர்கள்,

தமிழ்நாட்டிலே ஆதிச்சநல்லூர் என்று திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஊரிலே கண்டெடுக்கப் பட்ட - அகழ்ந்தெடுக்கப்பட்ட - எத்தனையோ விதமான கலன்களும்,

புதுச்சேரிக்குப் பக்கத்திலே அரிக்கன்மேட்டிலே 40 ஆண்டுகளுக்கு முன்னலே அகழ்ந்து எடுக்கப்பட்ட பல பொருள்களும்,

பூம்புகாருக்குப் பக்கத்திலே அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களும் ஒரு பழைய வரலாற்றுத் தொடர்பையே எடுத்துக் காட்டுகின்றன.

அந்த வரலாற்றுத் தொடர்பு மொகஞ்சதாரோ ஹாரப்பா நாகரிகத்தோடு தொடர்புடையதாக இருக் கிறது.

அவ்வளவு பழங்காலத்து மக்களிடத்திலே படிந்து கிடந்த எண்ணங்கள்—சிந்தனைகள்—கடவுட் கொள்கைகள் எல்லாம் பிற்காலத்திலே ஆரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களுடைய உபநிடதங்களிலே, ஆகமங்களிலே அவர்களே கண்டறிந்தவை போல இடம் பெற்றன.

(எழுதப்பட்ட மொழிதான் வடமொழியே தவிர, அவர்கள் கைக்கொண்டு எடுத்தாண்ட தத்துவங்கள், சிந்தனைகள், கருத்துக்கள் எல்லாமே தமிழர்க்குச் சொந்தமானவை—திராவிடருக்குச் சொந்தமானவை என்று நானல்ல—ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள்!)

'பஞ்ச திராவிடம்' என்று நம் மக்கள் வாழ்ந்த பகுதி அழைக்கப்பட்டபோது ஆரியக் கருத்துக்களை அந்த பஞ்ச திராவிட மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

மராட்டியத்திலே, வீரன் சிவாஜி வாழ்ந்த காலத்திலே இந்து சாம்ராஜ்யத்தை அமைத்துத் தீர வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால் வீரன் சிவாஜி—ஒரு பக்தனாக—அதே நேரத்தில் ஒரு மாபெரும் வீரனாக—அஞ்சா நெஞ்சனாக—அலையெனப் பாய்ந்து வந்த எதிரிகளின் படைகளைத் தடுத்து நிறுத்துகிற மாபெரும் போர் வீரனாக விளங்கி இருக்கிறான் என்றாலும், அவனுடைய மனத்திலே ஏற்பட்ட மத—சமய உணர்வுகள் ஏறத்தாழ 400–500 ஆண்டுகளுக்கு முன்னாலே, ஏற்பட்ட சூழ்நிலையின் விளைவே தவிர, அதற்கு முன்னாலே, நீங்கள் ஆழ்ந்து நோக்கினால், மராட்டிய மண்டிலம் உட்பட ஆரியத்தினுடைய கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாத பகுதிகயாகத்தான் இருந்தது என்பதாலேதான் மராட்டியமும் பஞ்ச திராவிடத்திலே ஒரு பகுதியாகக் குறிப்பிடப் பட்டது,

இதை அவர்களுக்கு (மராட்டியர்களுக்கு) நாம் அறிவிக்க வேண்டும்.

நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே மலையாள மொழி அறிஞர்கள், 'மலையாளம் சமஸ்கிருதத்திலே இருந்து வந்தது என்றுதான் பேசுவார்கள்.

ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாலே ஆந்திரா விலே உள்ள மொழி அறிஞர்கள்கூட தெலுங்கு மொழி சமஸ்கிருதத்திலே இருந்து வந்தது என்பார்கள். ஏனென்றால் அதனுடைய மேல் பூச்சு சமஸ்கிருதம், சொற்களை உருவாக்கும் முறையிலே சமஸ்கிருத ஆதிக்கம். எனவே தமிழோடு தொடர்பு இல்லை என்று அன்றைக்குக் கருதினார்கள், தமிழோடு உறவுடையது என்று சொல்வது பெருமையாகாது என்று கருதி அன்று மறுத்து வந்தார்கள்.

கடந்த 30, 40 ஆண்டுகளில், மொழி நூல் அறிஞர் கள் ஆராய்ந்து ஏற்ற ஒரு உண்மை தெலுங்கும் திராவிட மொழியே என்பது. ஒரு கோட்டை சிதைந்து புதைந்து போய், அதன் மேலே ஒரு காடு வளர்ந்திருக்குமானால், அந்தக் காட்டைப் பார்க்கும் ஒருவன் இது இன்ன காடு என்று பெயரிட்டு அழைத்தாலும், அந்தக் காட்டை அழித்து விட்டு உள்ளே புகுந்து பார்த்தால் இது ஒரு காலத்திலே சிவாஜி வாழ்ந்த கோட்டை-இது ஒரு காலத் திலே ராஜா தேசிங்கு வாழ்ந்த கோட்டை-ஒரு காலத்திலே சேரன் செங்குட்டுவன் வாழ்ந்த கோட்டை-என்று அந்த வரலாற்று உண்மைகளைக் கண்டு பிடிப்பதைப் போல, இன்றைய தினம் அந்த மொழி நூல் அறிஞர்கள், இந்த மொழிகளுடைய அடி மூச்சே தமிழ் மொழிதான் என்று எடுத்துக் காட்டுகிறார்கள்.

(இன்றைக்கிருக்கிற மேல் பூச்சு தான் நாம் முழு அளவும் ஏற்றுக் கொள்ளாத-விரும்பாத ஒரு நாகரிகமே தவிர, இந்தியாவின் அடி அமைப்பிலே உள்நோக்கிச் சென்று பார்த்தால், அதிலே திராவிடப் பண்பாடு,

திராவிட நாகரிகம்-திராவிட கலாச்சாரம் ஆகியவையெல்லாம் இடம் பெற்றிருக்கின்றன என்பது தெளிவாகும்.

தமிழ் மொழியினுடைய வேர்ச் சொற்கள் வடமொழியிலே கூட இடம் பெற்றிருக்கின்றன.

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்களும், பன்மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களும், மொழிநூல் துறையிலே ஆராய்ச்சி நடத்திய யாழ்ப் பாணம் ஞானப்பிரகாசர் என்ற பாதிரியாரும், மொழித் துறையிலே ஆராய்ச்சி நடத்துகின்ற வேறு சிலரும் தமிழ்ச் சொற்கள்தான் என்று கூறுவர். தமிழிலே உள்ள சில சொற்களின் வடிவு சற்றே திரிந்திருக்கலாம்; அந்த வேர்ச் சொற்கள்தான் வட மொழியை எழுத்து மொழியாக ஆக்குகிற போது அந்த மொழிக்குத் தேவையான மூல சொற்களாகப் பயன்பட்டன. இன்றைக்கும் சமஸ் கிருதத்தை ஆராய்ந்தால் ஒவ்வொரு சொல்லுக்கும் அதனுடைய மூல வேர்-தமிழிலே இருந்து பிறந்திருப்பதைக் காணலாம் என்று சான்றுகளோடு எடுத்துக் காட்டி இருக்கிருர்கள்.

இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொன்ஞல், உலக மொழிகளுக்கெல்லாம் முதல் மொழி தமிழ் மொழிதான் என்று இன்றைக்கு ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிருர்கள்,

முதல் மனிதன் தோன்றியது எங்கே?

உலகம் தோன்றி ஏறத்தாழ 3 கோடி ஆண்டுகள் ஆகின்றன என்று சொல்வார்கள். பூமியில் உயிர்கள் தோன்றி 30 லட்சம் ஆண்டுகள் ஆகின்றன. மூன்று லட்சம் ஆண்டுகளாகின்றன மனிதன் தோன்றி.

மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முன்னே தோன்றிய மனிதன் 'மனிதக் குரங்கு' வடிவினன் என்று கருதப்பட்டதாக வரலாறு-விஞ்ஞான ஆராய்ச்சி.

அந்த முதல் மனிதன் எங்கே தோன்றினுன் என்று கேட்டால், பல்வேறு கண்டங்களிலும் ஆராய்ச்சி நடத்தியவர்கள் முதல் மனிதன் பிறந்த இடம் இந்துமாக்கடல்–அன்றைக்கு அந்தக் கடல் பகுதி நிலப்பகுதியாக இருந்தது என்றும் கூறுவர். அந்த நிலப் பகுதிக்கு மேல் நாட்டார் இட்டபெயர் லெமூரியா–தமிழ் நாட்டார் நெடுங் காலமாக வழங்குகிற பெயர் குமரிக் கண்டம். அந்த குமரிக் கண்டத்திலேதான் முதல் மனிதன் தோன்றினுன்; அந்த முதல் மனிதன்தான் உலகத்தில் முதன் முதலில் நாகரிகத்தைத் தோற்றுவித்தவன்; வளர்த்தவன். அதனுலே இந்தப் பகுதியை "மனித இனத்தினுடைய நாகரிகத் தொட்டில்" என்று வழங்கினர்.

நாகரிகம் வளர்ந்த காரணத்தாலேதான் மனிதன் முதன் முதலில் மொழி பேசினுன். அவன் பேசிய முதல் மொழி தமிழாக அமைந்து விட்டது. அந்த முதல் மொழி 'தம் மொழி–தம் மொழி'–என்று சொன்னதுதான் 'தமிழ் மொழி' என்று பெயர் பெற்றது.

பின்னுல் இலக்கியங்கள் உருவான காலத்தில் மொழியிலே பாட்டுக்கள் தோன்றிய காலத்தில் எம்முடைய மொழி 'ழ்' என்னும் ஓசைச் சிறப்புடையது என்ற காரணத்தால் 'தம்–ழ்' என்று கூறவே தமிழ் என்று ஆயிற்று என்பர். பிற மொழிகளிலே 'ழ' என்ற எழுத்தை, ஒலியைக் காண முடியாது.

இயல் இசை கூத்து இம்மூன்றையும் பெற்ற காரணத்தால் தருகிற இன்பம் இந்த மொழியிலே கிடைக்கிற காரணத்தால் தமிழ் என்பது 'இன்பம்' என்ற பொருளிலே வழங்கிற்று என்பார்கள்.

தமிழ்தான் முதலிலே தோன்றிய மொழி என்கிற போது 'நாமே உயர்ந்த மனிதர்'–"We are Supreme" என்ற

கருத்தில் சொல்லவில்லை. இயற்கையினுடைய விளைவு வரலாற்று உண்மை என்ற அளவில்தான் சொல்லு கிறேன்.)

அப்படிப் பிறந்த தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர் களான தமிழர்கள் பெற்றிருந்த அந்த வளர்ந்த நாகரிகம் அந்த நாகரிகம் பண்பாடு—கலை, இசை, சிற்பம், ஓவியம், ஆகியவற்றைக் காக்கக் கூடிய ஒரு இயக்கமாகத்தான் இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் செயலாற்றி வருகிறது.

தமிழ்ப் பண்பாடு எவ்வளவு பெரிய இலக்கியச் செல்வத்தைப் பெற்றது என்பதைப் பற்றியும், புறநானூற் றிலே காணப்படுகிற வீரம்—வள்ளுவராலே விளக்கப் பட்ட அறம்—சிலப்பதிகாரத்திலே காணப்படுகிற முத் தமிழ் மேன்மை, இளங்கோ அடிகளுடைய மாட்சி—கண்ணகியினுடைய கற்புத்திறன்—சீவக சிந்தாமணியினு டைய கவிதை வளம், சேக்கிழாருடைய செந்தமிழ் இனிமை, இப்படிப்பட்ட எத்தனையோ வகையான சிறப் புக்களை இங்கே வருகின்ற தமிழறிஞர்கள் பேசும்போது நீங்கள் கேட்கக் கூடும்.

இந்த இலக்கியங்கள் எல்லாம் எப்போது பிறந்தன என்று நீங்கள் சிந்திக்க முற்பட்டால் அதற்கு முன்பே இலக்கியங்கள் பல பிறந்து, அந்த இலக்கியங்களுக்கான ஒரு இலக்கணம் தோன்றி-அவ்வாறு தோன்றிய இலக் கணங்களிலே முதலில் தோன்றிய 'அகத்தியம்' என்ற இலக்கண நூல் இன்றைக்கு இல்லை என்றாலும், அந்த அகத்தியனுடைய மாணாக்கன் என்று கூறப்படும் தொல் காப்பியன் இயற்றிய இலக்கணமான தொல்காப்பியம், இன்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னே தமிழகத்திலே இயற்றப்பட்டு இன்றைக்கும் கிடைக்கிறது.

2200 ஆண்டுகளுக்கு முன்னுலே இலக்கண நூல் பிறந்தது என்று சொன்னுல் அதற்கு முன்னுலே ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயாவது இலக்கியங்கள் பிறந்திருந்தால்தான் இலக்கணம் தோன்ற முடியும்.

இலக்கண நூலான தொல்காப்பியத்தில் 'என்மனுர் புலவர்' என்று குறிப்பிடுகிருர்-தொல்காப்பியர்.

'பொய்யும் வழூவும் தோன்றிய பின்னர் 'ஐயர்' யாத்தனர் கரணம் என்ப' என்று ஒரு சூத்திரம் வரைகிருர்.

ஐயர் என்று குறிப்பிடுவது இன்றைக்கு சாதிமுறை யிலான 'ஐயர்களே' அல்ல.

'ஐயர்' என்ருல் 'பெரியவர்கள்' என்று பொருள். 'ஐயன்' என்ற ஒருமைச் சொல்லின் பன்மைதான் 'ஐயர்'.

அண்மைக்காலத்தில் 'போப் ஐயர்' என்று அழைக்கப் பட்டாரே அது அந்தப் பொருளில்தான்.

'ஐயர் யாத்தனர் கரணம்' என்று சடங்குகளே, வழக்கு களே பெரியவர்கள் வகுத்தனர் என்று தொல்காப்பியர் சொல்கிருர் என்ருல், தொல்காப்பியருக்கு முன்னுலே-- எவ்வளவு காலத்திற்கு முன்னுலே அவை நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

'பொய்யும், வழுவும் தோன்றிய பின்னர்' என்றது, சமுதாயத்திலே ஏமாற்றுக்காரர்கள்—பித்தலாட்டக்காரர் கள் ஒருவருக்குச் சொன்ன வார்த்தையைக் காப்பாற்ருத வர்கள் தோன்றியதற்குப் பின்னுலே தான், அந்தச் சமு தாயத்தில் 'ஐயர் யாத்தனர் கரணம்' என்ருல், அதற்கு முன்னுலே எவ்வளவு காலத்துக்கு முன்பு தமிழன் வாழ்ந் தான் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அகம்-புறம்- கலித்தொகை இவைகளேயெல்லாம் காணும் போது, இவ் வளவு தெளிந்த கருத்துக்கள் வடிவு கொள்வதற்கு எவ்

வளவு காலத்திற்கு முன்னே புலவர்கள் பாடல் இயற்றத் தொடங்கியிருக்க வேண்டும் என்பதையும் நீங்கள் காண வேண்டும்.

அண்மையிலே கூட, தென்னுற்காடு மாவட்டத்தில்-'ஜம்பை' என்ற ஒரு சிற்றூரின் மலைப் பகுதியில் 1850 ஆண்டுகளுக்கு முன்னுலே தமிழன் எழுதிய கல்வெட்டு-தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி ஆட்சிக் காலத்திலே எழுதப்பட்ட கல்வெட்டு—திருக்கோவிலூரை ஆண்ட மன்னன் திருமுடிக்காரியை வென்ற அதியமான் நெடுமான் அஞ்சி அந்தப் பகுதிக்குச் சென்று அங்கே தனி—குகைக் கோயில் போன்ற ஒரு இடத்தை மலையிலே செதுக்கச் செய்து, அதிலே 'இது சத்யபுத்ர அதியமான் நெடுமான் அஞ்சி கட்டியதளி' என்று அன்றைய தமிழ் வரி வடிவில் எழுதிய கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இது நான்கைந்து நாட்களுக்கு முன்னுலே கல்வெட்டுத்துறை ஆராய்ச்சியாளர் ஒருவர் எழுதிய கட்டுரையாக 'தினமணியில்' வெளிவந்திருக்கிறது.

1850 ஆண்டுகளுக்கு முன்னுல் என்ருல் அது ஔவையார் வாழ்ந்த சங்க காலம் ஆகும்.

'சத்யபுத்ர' என்ற வடமொழியை அதியமான் நெடுமான் அஞ்சி அடைமொழியாகக் கொள்ள வேண்டிய நிலைமை என்ன என்றெல்லாம் இன்றைக்கு நாம் ஆராயத் தேவையில்லை.

எனவே அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில், தமிழ் மொழி எத்தனையோ தொல்லைகளுக்கிடையில் இடர்ப்பாடுகளுக்கு இடையில் - ஆதிக்கவாதிகளுடைய எண்ண அலைகள் தமிழகத்திலே மோதிக்கொண்டிருந் தாலுங்கூட, அவைகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து

பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணி நாம் பெருமைப்படலாம்.

ஆங்கிலம் அறிந்த தேசிய கவி பாரதியார் அவர் காலத்தில் "மெல்லத் தமிழ் இனிச்சாகும்" என்று ஒருவன் கூறக் கேட்டுத் துடித்திருக்கிருர். அந்தப் பாரதி கூறு கிருர். "தமிழ் இனி வாழாது என்கிருர்களே. அதைக் கேட்டு நான் வேதனைப்படுகிறேன். இந்தத் தமிழ் இனி வாழாதா? வாழ முடியாதா? வாழ வைக்க மாட்டோமா? என்ற உணர்வுக்கு ஆளாகி, கலைகள் எல்லாம் மேற்குத் திசையிலே வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் இங்கே நந்தமிழினில் கொண்டு வர வேண்டும்" என்று பாரதியார் பாடுகிருர்.

ஏன் அப்படிப் பாடுகிருர் பாரதியார்?

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணும்" என்ற உணர்வு அவரிடத்திலே தானுகவே பிறந்தது.

'யாமறிந்த மொழிகளிலே' என்று பாடுகிருர் என்ருல் அவர் பல மொழிகள் அறிந்தவர் என்னும் உரிமையால் கூறுகிருர்.

அப்படிப்பட்ட உணர்வுபடைத்த பாரதிக்கு 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்று பிறர் கூறக்கேட்டபோது உள்ளம் எப்படிப் பொங்கும் என்பதையே அவரது கவிதை காட்டுகிறது.

தமிழைச் சாகவிடக் கூடாது என்று அவர் பாடியது 1910–12-இல். 1922-இல் அவர் மறைந்தே போய்விட்டார். பாரதி நிறை வாழ்வு வாழவில்லை.

அப்படிப்பட்ட பாரதியாரோடு நெருங்கிப் பழகிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பாரதியாருடைய அதே உணர்வைப் பெற்றவராக மேலும் அதனை வளர்த்து

பகுத்தறிவுவாதியாக-புரட்சி உணர்வு கொண்ட சிந்தனையாளராக தமிழுக்கு ஆக்கம் ஏற்படுத்துகிற அந்த நோக்கத்திலே பல்வேறு எழுச்சியூட்டும் கவிதைகளைப் பாடி வழங்கினார்.

தமிழைப் போற்றுகிற உணர்வு யாரிடத்தில் இருக்குமானாலும், அவரெல்லாம் தமிழைக் காப்பாற்றக் கூடிய ஆற்றலைத் தமிழ் மக்களிடம் உருவாக்கி இருக்கிறார்கள்.

இன்றைக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்னாலே ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த சீகன் பால்க் (ZIEGEN BALG) என்னும் ஒரு பாதிரி, ஆசிய நாடுகளெல்லாம் சுற்றுப்பயணம் வருகிறார். தென்னாட்டிற்கும் வருகிறார்.

சீனப் பயணிகளான யுவான் சுவாங், பாஹியான் போன்றவர்கள் வந்ததைப் போல அவர் வருகிறார். தென்னாட்டில்-தமிழகத்தில் சில ஆண்டுகள் தங்கியிருந்து ஆர்வத்தோடு தமிழ் மொழி பயின்று திரும்புகிறார்.

ஜெர்மன் நாட்டின் பாதிரி தென்னாட்டுக்கு வந்துவிட்டு ஜெர்மனிக்குத் திரும்புகிற வழியில் இங்கிலாந்துக்குச் செல்கிறார். இங்கிலாந்து நாட்டில் மிகப்பெரிய பாதிரியாரான காண்டர்பரி பாதிரியார் இவரை வரவேற்கிறார்.

அந்த வரவேற்பு முதலாம் ஜார்ஜ் மன்னருடைய தலைமையிலே அளிக்கப்படுகிறது, காண்டர்பரி பாதிரியார் அவரை வரவேற்கும்போது, இவ்வளவு சிறப்பு வாய்ந்த பேரறிஞரான-உலகம் சுற்றிய பாதிரியாரை ஒரு உயர்ந்த மொழியிலே நான் வரவேற்க விரும்புகிறேன். அப்படி வரவேற்பதற்கு ஏற்ற உயர்ந்த மொழியான லத்தீன் மொழியில் வரவேற்பிதழைப் படித்துக் கொடுக்கிறேன் என்று அந்த மொழியில் இயற்றப்பட்ட வரவேற்பிதழைப் படித்துக் கொடுக்கிறார்.

லத்தீன் மொழியில் அளிக்கப்பட்ட வரவேற்பை அந்த ஜெர்மன் நாட்டுப் பாதிரியார் ஏற்றுக்கொண்டு பதில் சொல்லும்போது "நான் கீழ்த்திசை நாடுகளுக்குப் போய்த் திரும்பி வருவதற்காக என்னை அன்போடு வரவேற்று, அதற்காக ஒரு உயர்ந்த மொழியிலே வர வேற்க வேண்டுமென்ற கருத்தில் லத்தீன் மொழியில் எழுதி வரவேற்றிருக்கிறீர்கள். அவ்வளவு உள்ளன்போடு நீங்கள் லத்தீன் மொழியிலே என்னை வரவேற்றிருக்கும் போது, நானும் என்னுடைய உள்ளன்பைக் காட்ட ஒரு உயர்ந்த மொழியிலேதான் நன்றி கூற வேண்டும்.

நான் அப்படிப்பட்ட உயர்ந்த மொழி எது என்று பார்க்கிற போது, உலகத்திலே பல நாடுகளுக்குச் சென்று வந்த நான் மிகச் சிறந்த மொழியாக இருக்கிற செந்தமிழ் மொழியிலே தான் எனது நன்றியைச் சொல்ல வேண்டும், என்று இங்கிலாந்து நாட்டிலே 200 ஆண்டுகளுக்கு முன்னலே செந்தமிழிலே நன்றி சொன்னர் ஜெர்மன் நாட்டுப் பாதிரியார்.

நாம் இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த மொழி யிலும் நன்றி சொல்லத் தயாராகி விட்டோம்.

நம்மைப் பொறுத்தவரை நன்றி சொல்ல ஒரு உயர்ந்த மொழி தேவையில்லை. நம் தாய்மொழியே கூட நம்மால் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனல் தமிழ் மொழி யினுடைய பெருமையை அந்த ஜெர்மன் நாட்டுப் பாதிரி யார் உணர்ந்து போற்றிய வகையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோலத்தான், ஜி. யு. போப் என்ற மேல்நாட்டு அறிஞரும் உணர்ந்தார்.

அவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். அவர் இந்தி யாவிற்கு வந்து தென்னட்டிலே பல ஆண்டு காலம் வாழ்ந்து தனது நாட்டிற்குத் திரும்பினர். அவர் திருவாச கத்தை, திருக்குறளை எல்லாம் மொழி பெயர்த்தவர்.

அந்தப் பெரியவர் மறைவதற்கு முன் சொன்னர்,

"நான் மறைகிறபோது என்னுடைய சமாதியில் "இவன் ஒரு தமிழ் மாணவன்!" 'Here Lies a Student of Tamil' என்று எழுதி வையுங்கள் என்று சொன்னர்.

ஜி.யு. போப் என்ற மேல் நாட்டு அறிஞர், தமிழ் நாட்டிலே வந்து தங்கிப் பல ஆண்டுகள் வாழ்ந்தவுடன், தனக்கு எது பெருமை என்று கருதுகிருர் என்ருல், தன்னை ஒரு தமிழ் மாணவர்-என்று குறிப்பிடுவதையே பெருமை யாகக் கருதுகிருர்" 'Here Lies a learned Soul of Tamil-என்றுகூடச் சொல்லவில்லை Here Lies a Student of Tamil என்று எழுதச் சொன்னர்.

அதைப்போல மேல் நாட்டைச் சேர்ந்த பாதர் ஹீராஸ் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேனே அந்த அறிஞர் 1942-ஆம் ஆண்டு அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலே உரை நிகழ்த்த வந்தார்.

அந்நிகழ்ச்சியை நானும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் மாணவர்களாக இருந்து ஏற்பாடு செய்தோம். அவர் உரை நிகழ்த்திய பொழுது, மொஹஞ்சதாரோ—ஹாரப்பாவில் காணப்படும் பழைய நாகரிகம் திராவிட நாகரிகம் என்று விவரித்தார்.

நாங்கள் அவரைத் தமது கையொப்பம் இட்டுத் தருமாறு கேட்டபோது, அவர் கையெழுத்துப் போடுகை யில் I am a Dravidian from Spain என்று எழுதி, ஹீராஸ் என்று கையெழுத்துப் போட்டார்.

நான் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த திராவிடன் என்று அவர் பெருமையோடு எழுதினர்.

ஏனென்ருல் அவருடைய ஆராய்ச்சியின்படி, திராவிடக் கலை - நாகரிகம் - பண்பாடு போர்ச்சுக்கல்

ஸ்பெயின்–இத்தாலி–முதலான மத்தியதரைக்கடல் பிரதேசங்கள் – எகிப்து – கிரேக்கம் இவைகளிலெல்லாம் ஒரு காலத்திலே (திராவிட நாகரிகம்) பரவி இருந்தது என்ற வரலாற்று அடிப்படையில் - I am Dravidian from Spain only by skin my colour has changed) என்ற கருத்துப்பட அவர் எழுதிக் கையொப்பமிட்டார்.

போப், ஹீராஸ் போன்ற மேல்நாட்டவர் மட்டுமேயன்றி தமிழ்நாட்டிலே அருந் தமிழறிஞர்களாக விளங்கியவர்களிலே ஒருவரான வடலூர் இராமலிங்க வள்ளலார் தமிழின் உயர்வை ஒரு வகையிலே போற்றிக் கூறியுள்ளார்.

வடலூர் வள்ளலார் 110 ஆண்டுகளுக்கு முன்பு 1873–லே மறைந்துவிட்டார்கள். 1823-லே பிறந்தவர். கடவுளைப் போற்றி திருவருட்பா பாடியவர். சன்மார்க்கத்தைப் பாடுபவர். போகிற இடமெல்லாம் சமரசத்தைப் பாடுபவர். சமரச சன்மார்க்க ஞானி என்று பாராட்டப் பெற்றவர்.

அருட்பா இயற்றிய வடலூர் வள்ளலார் உரைநடையிலே ஒரு இடத்திலே குறிப்பிடுகிறுர்:

"மூச்சிரைக்க அடிவயிற்றிலே இருந்து கடுமையான ஒலிகளை எழுப்பிப் பொருள் விளங்காத ஒரு நிலையில் வடமொழியில் உன்னைப் பாடுகிற நிலைமையை எனக்கு ஏற்படுத்தாமல், நல்ல தமிழில் – இனிய தமிழில் – இன்பத் தமிழில் உன்னைப் பாடுகிற வாய்ப்பை எனக்கு அருள் புரிந்தாயே ஆண்டவா; உன்னை நான் போற்றுகிறேன், நன்றி செலுத்துகிறேன்" என்று,

ஆண்டவன் என்னை வடமொழியில் பாடவைக்காமல் அத்துன்பத்துக்கு ஆளாக்காமல் தமிழிலே பாட வைத்ததற்கு நன்றி என்று அவர் சொன்னுர்.

மறைமலை அடிகளை மும்மொழி வல்லுநர் என்று சொல்லுவார்கள். தமிழிலும்-வடமொழியிலும் ஆங்கிலத்-திலும் வல்லுநர் அவர்.

'நான் வடமொழி பேசினுல் எனக்கு வாழ்நாள் குறையும். தமிழ் பேசினுல் வாழ்நாள் நீடிக்கும். தமிழ் பேசுகிறவன் பேசுவது அவனது இருதயத்திற்கு அதிக வேலை தராத காரணத்தால் அவன் நெடிது வாழலாம். வடமொழி பேசினுல் நீண்ட காலம் வாழ முடியாது'' என்பார் அந்த மறைமலைஅடிகள்:

மிகச் சிறந்த அறிஞராக விளங்கிய பரிதிமாற் கலைஞர் என்னும் தமிழ்ப் பெயர் பூண்ட சூரியநாராயண சாஸ்திரியார் கிருத்துவக் கல்லூரியிலே 50 ஆண்டுகளுக்கு முன்னுலே பேராசிரியராகப் பணியாற்றியவர்.

“தமிழ் மொழியிலே பிற மொழிகளைக் கலந்து எழுதுவது என்பது தமிழுக்கு இழுக்கு என்பது மட்டுமில்லை; தமிழனுக்கே கேவலம்; தமிழ் மொழி ஆற்றல் மிக்க மொழி. அந்த மொழியிலே பிறமொழிச் சொற்களைக் கலந்து அதை ஆற்றல் இல்லாத மொழி போலக் கேவலப் படுத்தாதீர்கள்'' என்று அவர் சொல்வார்.

யாரோ ஒரு வடமொழிப் பண்டிதர் சூரியநாராயண சாஸ்திரியாரைப் பார்த்து “ஐயா, உன்னுடைய தமிழுக்கு 'முகம்' உண்டோ? என்று கேட்டார். 'தமிழ் அணங்கிற்கு முகமில்லை' என்று கருத்துப்பட கூறி முகம் என்ற சொல் தமிழிலே இல்லையே என்று வினவினுர்.

உடனே பரிதிமாற் கலைஞர் சொன்னுர், "தமிழுக்கு முகம் இல்லை என்று சொல்கிருயே! அப்படிச் சொல்வதற்கு காரணம் தமிழணங்கு தலைகுனிந்து கொண்டிருக்கிருள். அதனுலே அவள் முகம் உமது கண்ணுக்குத் தெரியவில்லை”. என்று.

'முகம் என்ற சொல்லே தமிழ்ச்சொல் - மு - என்பதன் அடியாகப் பிறந்தது அது. முன்-முனை-முள்-மூக்கு முதல்-என்பவற்றில்போல முன் நிற்பது - முன்னதாக உள்ளது - என்னும் கருத்துத் தொடர்புடைய சொல். மேலும் 'முகத்தல்' தன்மையுடையது முகம். கண்-ஒளியையும்: காது-ஒலியையும்; மூக்கு-மணத்தையும் - வாய் (நாக்கு) சுவையையும் முகத்தில் உடையது. முகத்தல் என்னும் அளவை முறை போன்று, பொறிகளான் புலன்களை அளக்கும் தொழிலில் ஈடுபடுவது முகம். முகம் - தலையின் பகுதி. அதனுள் உள்ள மூளைக்கு-முகம் சான்று இதை அறியாது-தமிழுக்கு முகம் இல்லை என்று கூறுகிறீர்.

உண்மையில் வடமொழிக்கு வாய் இல்லாத காரணத்தினாலே - 'ஊமை'யாக நிற்கின்ற வடமொழி என்னும் இளைஞனை நோக்கும்போது நாணத்தால் 'தமிழணங்கு' தலை கவிழ்கின்றாள்; அதனால்தான் தமிழணங்கின் 'முகம்' உமக்குத் தெரியவில்லை - என்று அறிவுச் சுடர் கொளுத்தினார்-பரிதிமாற் கலைஞர்.

பரிதிமாற் கலைஞர் நற்றமிழ் போற்றியவர். செந்தமிழ்க் காவலர். தனித்தமிழே தமிழ் காத்திடும் வழி என்பது உளங்கொண்டு, பிறமொழி விலக்கித் தனித் தமிழில் எழுதுவதை வரவேற்றார்.

இவ்வளவு செய்திகளையும் நான் கூறுவது ஒரே ஒரு காரணத்துக்காகத்தான், ஏதோ ஒரு காரணத்தால், சூழ்நிலையால், ஆதிக்கத்தால் தமிழ்மொழி தாழ்ந்தது என்ற ஒரு எண்ணம் - தமிழ் அவ்வளவு பெருமைக்குரியது அல்ல, சிறப்புடையதல்ல என்ற ஒரு கருத்து, தமிழில் உள்ள அரிய செல்வங்களை அறிந்துகொள்ள ஆர்வங் கொள்ளாத நிலைமை-தமிழைப் போற்றும் உணர்வு இல்லாத காரணத்தால் 'தமிழன்' என்று சொல்லிக் கொள்ளவே அஞ்சுகிற ஒரு மனப்பான்மை, தமிழனைத் தமிழன் ஆதரிப்பதற்குத் துணிவில்லாத ஒரு கோழைத்

தனம்–"தமிழன் என்று சொல்லடா – தலை நிமிர்ந்து நில்லடா" என்னும் பாட்டைப் பாடினாலுங்கூடத் தலை நிமிர்ந்து நிற்கத் தமிழனாலே முடியாத ஒரு இழிநிலை-இன்று தமிழர்களிடத்திலே காணப்படுகிறது.) தமிழன், தனி நாகரிகம் உடைய தமிழ் இனத்தவன்; அவனது வரலாற்றுப் பெயரே திராவிடன் என்பது – அது பலருக்கு குறுகிய நோக்கமாகத் தோன்றுகிறது. ஆனால் மற்றவர்கட்கு அப்படி அல்ல, அவர்களது இனமும் மொழியும் அவர்கட்குப் பெருமை, வடமொழியின் பெருமை-தங்கள் மதக் கொள்கையின் மேன்மை - தங்கள் சாத்திரங்களின் அருமை தாங்கள் வகுத்த சாதி தருமத்தின் உயர்வு, ஆகியவை பகுத்தறிவுக்கு ஒவ்வாவிடினும், காலத்திற்கு ஏலாதனவென்றாலும் அதன் பெருமையைப் பேசி - நம்மவர் மீது ஆதிக்கம் செலுத்த முனைகின்றனர்.

அந்த ஆதிக்கத்தை மாற்றிட நம்முடைய பெருமையை நாமுணர வேண்டாமா? நாமுணர மாட்டோமா? நாம் உணரக்கூடாதா?

தமிழன் தலைநிமிர வேண்டும் என்றேன். தலைகுனியாதே தமிழா என்றார் புரட்சிக் கவிஞர்.

"தமிழன் எவரையுந் தாழ்த்தான்; தமிழன் எவருக்குந் தாழான்" - என்பதே தமிழன் கண்ட நீதி. ஆனால், இன்று தமிழ்நாட்டிலேயே தமிழன் தலை நிமிர முடியவில்லை. மற்ற இடங்களில் முடிகிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது.

"தமிழன் என்றோர் இனமுண்டு - தனியே அவர்க்கொரு குணம் உண்டு" என்று சொன்னாலும் தனியே என்ன குணம் என்று கேட்டால் எப்படியாவது,எவனிடத்திலாவது கெஞ்சிக் கூத்தாடி 'அவனவன் பிழைப்பு நடத்தினால் போதும் என்பதுதான் தனியே அவனுக்கு ஒரு குணமாக இன்று இருக்கிறதே தவிர வேறு அல்ல.

இல்லையானல், திராவிட முன்னேற்றக் கழகத்திலே பெரியாருடைய தொண்டர்களாக - அறிஞர் அண்ணாவினுடைய தம்பிகளாக ஈடுபட்டவர்கள், திசைமாறிப்போய் இருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? மக்கள் தடுமாறிப் போகிற அரசியல் நிலைமையைத், தமிழ்நாட்டிலே வளரவிட்டு இருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

யாருக்கு உண்மை தெரியாது? யார் தமிழன் என்பதுகூட முக்கியமல்ல. யார் தமிழனுக்காக வாதாடக் கூடியவன்? என்பது மாற்று முகாமிலே இருக்கிற எங்களுடைய அருமை நண்பர்களுக்கெல்லாம் தெரியாதா?

கலைஞரைவிட தமிழர்களுக்காக வாதாடக்கூடிய ஒருவரை அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு இந்த நாடு பெற்று இருக்கிறதா?

கலைஞர் தலைமையில் செயற்படும் தி. மு. கழகத்தைவிட வேறு எந்த அமைப்பின் மூலமாக–வேறு எந்த ஆட்சியின் மூலமாக–வேறு எந்தக் கொள்கை மூலமாகத் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியும்?

தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தைவிட, தமிழ் இனத்திற்காக வாதாட வேண்டும் என்பதைவிட தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்றே அவர்கள் எண்ணுகிருர்கள். தங்களுக்கு இது ஒரு வாய்ப்பு. தவறினல் பிறகு கிடைக்காது. இந்த ரயில் தவறினல் பிறகு பம்பாய் போக முடியாது. இந்த ரயிலை இழுக்கிற எஞ்சின் எந்த எஞ்சினக இருந்தாலும்-அது தடம் புரளக்கூடிய எஞ்சினக இருந்தாலும் சரி–அது எரிசாராயத்திலே ஓடுகிற எஞ்சினக இருந்தாலும் சரி அந்த ரயிலிலே பயணம் செல்வதே முக்கியம் என்று கருதுகிற ஒரு மனப்பான்மை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

ஒரு இயக்கத்தினுடைய தலைவனே ஒரு கட்சியை நடத்திச் செல்கிறவனே நமக்கு நண்பனக இருந்தால்தான்

அந்தக் கட்சியிலே இருக்க வேண்டும் என்று கருதுவது கூடச் சரியல்ல. ஒரு இயக்கத்திற்கு கொள்கை இருக்குமானால்-இலட்சியம் இருக்குமானால், அந்த இலட்சியத்தைக் காப்பாற்றக் கூடிய இயக்கம் அது என்று தெரியுமானால், அந்த இயக்கத்திலே நம்மை நாம் ஒப்படைத்துக் கொள்வதன் மூலமாகத்தான் நாம் தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்க முடியும்.

அந்த உணர்வில்லாத காரணத்தால் தமிழர்கள் ஓரளவிற்குத் தடுமாறி இருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உண்மையான இலட்சியத்தை உணர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் இன்றைக்குப் பெருகிக் கொண்டே இருக்கிறார்கள்.

இலங்கையிலே வாழுகிற தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையெல்லாம் துடைப்பதற்கான மார்க்கம்-நேரடியான மார்க்கம் நமக்கு இல்லை; நம்முடைய ஆழ்ந்த இரங்கலையும் கண்டனத்தையும் தெரிவிப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை என்று சொன்னாலும், (தமிழ் மக்களின் உணர்வினுடைய அளவைப் பார்த்து இலங்கையிலே வாழுகிற சிங்களவர்கள்-இலங்கையிலே ஆட்சி நடத்துகிற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அக்கிரமத்தைக் கைவிட்டு நியாமாக நடக்க வழிபிறக்க வேண்டும் என்ற உணர்வோடு தி. மு. கழகம் முயற்சி எடுத்துக் கொண்டது.

முதல் கட்டத்திலே எல்லாம், ஆளுகிற முதலமைச்சர் உட்பட தமிழ்நாட்டின் அனைத்துக்கட்சிகளும் ஒருமித்து ஈடுபடுகிற ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கருதித்தான் தி. மு. கழகம் செயல்பட்டது.

அனைத்துக் கட்சிகள் சார்பாக ஒரு அர்த்தால் நடைபெறுகிற அளவிற்கு ஆதரவாகத்தான் நாங்கள் இருந்தோம்.

ஆனால் இலங்கையிலே வாழும் தமிழர்கள் இலங்கை யிலே இருந்து விரட்டி அடிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு சிங்களவர்களாலே தாக்கப்படுகிற பல் வேறு கொடுமைகளை நாங்கள் கேள்விப்பட்டோம்.

அந்த நேரத்தில், தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வை இந்திய அரசுக்கு அதிகமாகப் பிரதிபலிக்க வேண்டும்-இந்திய அரசு அது காரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் வற்புறுத்தி எடுத்துக் கூறித் தமிழர்களுக்குப் பாதுகாப்பு தரும்படியாகச் செய்ய வேண்டும் என்று எண்ணினேம்.

சென்னை மாநகரத்தை அடுத்த திருவொற்றியூர் தனபதி என்ற ஒரு தோழர்–திருமணமான இளைஞர்-ஏறத் தாழ 30-பேருடன் இலங்கைககுச் சுற்றுப்பயணம் சென் றிருந்தபோது, தனபதி மட்டும் தனியாக ஒரு தேனீர் கடையில் இருந்தபொழுது அந்த வழியாகப் போன சில சிங்கள வெறியர்கள் இவன் தமிழன் என்று கண்டு கொண்டனர்,

உடனே அவன் எந்த ஊர் எந்த நாடு எங்கு இருந்து வந்தவன் என்று எதுபற்றியும் எண்ணமல், தமிழன் என்று எண்ணியவுடன் கையிலிருந்த ஆயுதத் தால் வெட்டி வீழ்த்த அவன் அங்கேயே பிணமாக வீழ்ந் தான். மற்றவர்கள் ஓடித் தப்பினர்.

அந்தச் செய்தி தமிழ்நாட்டிற்கு வரவே, மிகுந்த வேதனை கொண்ட தி. மு. கழகம் ஒருநாள் அடையாள மறியல் நிகழ்ச்சியிலே ஈடுபட்டது.

அடையாள மறியல் நிகழ்ச்சியிலே தி. மு. கழகம் ஈடு பட்டது என்று சொன்னல், ஒரு வேளை முதலமைச்சர் எம். ஜி. ஆருக்கு தி. மு. கழகம் இந்த நிகழ்ச்சியிலே ஈடு பட அனுமதிக்கக்கூடாது என்ற எண்ணம் இருந்தாலுங் கூட, அவர்களை எல்லாம் கைது செய்து அன்று இரவோ

மறுநாளோ விடுவித்து இருப்பாரேயானல் ஒரு பெரிய போராட்டத்தைத் தமிழ் நாட்டிலே நடத்த வேண்டிய அவசியமே ஏற்பட்டு இருக்காது.

வேறு பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதற்கு முன்னர் அடையாள ஆர்ப்பாட்டம் செய்தபோது அவர் களை எல்லாம் கைது செய்து அன்று மாலையிலேயே விட்டு விட்டார்கள்.

ஆனல் தி. மு. கழகத் தோழர்கள் மீது வழக்குப் போடுவோம் 15 நாள் ரிமாண்டில் வைப்போம்-தொடர்ந்து அவர்கள் மீது வழக்கு நடத்திப் பிறகு நீதி மன்றத் தீர்ப் பிற்கு ஏற்பத்தான் விடுவிக்கப்படுவார்கள் என்று அறி விக்கப்பட்டது.

அதனலேதான் தி. மு. கழகம் தொடர்ந்து மறியல் போராட்டம் நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தமிழக அரசு மறியல் போராட்டத்திலே ஈடுபடுகிற தி. மு. கழகத் தோழர்களை அடக்கி விடலாம். ஒடுக்கிவிட லாம், என்ற எண்ணத்திலே செயல்பட்டது.

பேரறிஞர் அண்ண பிறந்த நாளைக் கொண்டாட வேண்டிய திருநாளில், செப்டம்பர் 15 அன்றைய தினம், அதுவரையில் போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் 450 பேர் சிறையில் இருந்த காரணத்தால் கலைஞர் அவர்கள் தி. மு. கழகச் சார்பாக, "இதுவரையில் அரசு கழகத் தோழர்களை விடுதலை செய்யாத காரணத்தால், நானும் அறப்போராட்டத்தில் ஈடுபடுகிறேன்" என்று அறிவித்து விட்டு அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அவர் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்னலேயே நள்ளிரவில் இருந்து சென்னை மாநகரில் நூற்றுக்கணக் கான கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்

காலை 9 மணிக்கு கலைஞர் அவரது வீட்டிலே இருந்து புறப்படுகிறபோது 150க்கு மேற்பட்டவர்கள், கைது செய்யப்பட்டார்கள். அன்று காலையில், வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அண்ணசிலைக்கு தி. மு. க, வினர் யாருமே மாலை அணிவிக்க அனுமதிக்கப்படவில்லை. அங்கே ஆயிரக்கணக்கில் காவல் துறையினரைக் கொண்டுவந்து குவித்து, கூடியிருந்த பல்லாயிரக்கணக் கான மக்களை அடித்துத் துரத்தியும் கண்ணீர்ப் புகை வீச்சு நடத்தியும் கலைத்தார்கள்.

கலைஞர் கைது செய்யப்பட்ட செய்தி அறிந்த நாடு கொந்தளித்து எழுந்தது. ஏறத்தாழ 15 ஆயிரத்திற்கும் மேலான கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

"கலைஞரைச் சிறையில் வைத்தால், நீங்கள் என்ன செய்ய முடியும்? நாங்கள் கலைஞரை மறியல் செய்ய அனு மதிக்க மாட்டோம், என்ற ஆணவப் போக்கோடு தமிழ கத்தின் முதலமைச்சராக ஆகிவிட்ட எம். ஜி. ஆர். நடந்து கொண்ட காரணத்தால் நாடு கொதித்தெழுந்தது. மாவட் டங்களிலெல்லாம் வேலை நிறுத்தம்-ஆர்ப்பாட்டம் மறியல் ஊர்வலம்-உண்ணவிரதம் என்று உணர்ச்சிமயமான ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்ட நேரத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் - கழகத் தோழர்கள்— உறுதி வாய்ந்த உள்ளம் படைத்த உத்தமர்கள் தாங்கள் எப்படிப்பட்ட தியாகம் செய்தும் இயக்கத்தைக் காப் பாற்ற வேண்டும் என்ற உறுதிபடைத்த தோழர்கள் தங்களைத் தாங்களே தீக்குளித்துப் பலியிட்டுக்கொள்ள முனைந்து விட்டார்கள்.

தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்வது நாங்கள் எதிர் பார்த்ததும் அல்ல, விரும்பியதும் அல்ல; ஏற்றுக் கொள் வதும் அல்ல.

ஆனல் அகில இந்தியாவிலே இந்திமொழி ஆதிக்கம் அரசியல் சட்டப்படி உருவாக்கப்படுகிறது என்னும் அதிர்ச்சி ஏற்பட்ட கால கட்டத்தில், 1964-ஆம் ஆண்டில் தொடங்கி 1965-ஆம் ஆண்டுவரை தமிழ் நாட்டிலே இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிற வீர உணர்வு தமிழர்களுக்குத் தேவை என்பதற்காக, அன்றைக்குப்போராட்ட உணர்வு மிக்க இளைஞர்கள் தீக்குளித்துத் தங்களையே பலியிட்டுக் கொண்டு ("தமிழுக்காக எங்களுடைய உயிரையே வழங்குகிறோம்; உடல் மண்ணுக்கு. உயிர் தமிழுக்கு.' என்று எப்படி வழங்கினார்களோ அப்படி, தமிழினத் தலைவர் கலைஞரைச் சிறையிடுவதா என்று ஆவேசமுற்று தங்களையே தீக்கிரையாக்கிக்கொண்டு புதிய தியாக வரலாறு படைத்து இருக்கிறார்கள் இப்போது.)

இந்தி எதிர்ப்பு உணர்வினைக்காட்ட அன்று தீக் குளித்ததுபோல, இப்பொழுது இலங்கையிலே அந்த மண்ணுக்கே சொந்தக்காரர்களான தமிழர்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளைக் கண்டித்துக் குரல் கொடுக்கிற இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை அடக்கிவிடலாம் என்று எம். ஜி. ஆர். கருதுவதா? அந்த எண்ணம் வெற்றி பெறுவதா? தமிழர் உரிமைக்குக் குரல் கொடுக்கிறக் கலைஞரைச் சிறையிலே வைத்துவிட் டோம் என்று ஒரு ஆணவமா? என்ற உள்ளக் குமுறல் மனக் கொதிப்பு - (கலைஞரைச் சிறையிட அனுமதித்து விட்டால் தமிழனுக்காக குரல் கொடுக்க யார் இருக்கிறார் கள்? அந்தோ தமிழகமே! உன் எதிர்காலம் இதுதானா?) அந்த எதிர் காலத்தை மாற்றுகிற ஆற்றல் பிறக்காதா என்று எண்ணி ஏக்கமுற்ற இளம் தோழர்கள் கோவிலடி பிருந்தாவன் – திருச்சி மனோகரன் - பெருந்துறை முத்துப் பாண்டியன்-சென்னை மேரி அம்மையார் திருவாரூர் கிட்டு ஆகிய அருமைத் தோழர்கள் தீக்குளித்து உயிர் துறந் தார்கள்.

இன்னும் ஐந்தாறு தோழர்கள் தீக்குளித்த நிலையில் தடுக்கப்பட்டு மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள், அவர்களது உயிரைக் காக்க மருத்துவர்கள் போராடி வருகிறார்கள்.

ஒரு காலத்தில் தெற்கு வியட்நாம் நாட்டில் பௌத்த சன்னியாசிகள்தான் அந்த நாட்டிலே நடைபெற்ற ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்து, அராஜகத்தை எதிர்த்து தீக்குளித்தனர்.

அந்த பௌத்த பிட்சுக்களைவிட–அந்தத் துறவிகளை விட தமிழ்நாட்டு இளைஞர்கள் எந்த அளவு தியாக மனப்பான்மை பெற்றுள்ளனர் என்பதற்கு இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எடுத்துக்காட்டு.

அந்த வீரத் தியாகிகளுக்கு அஞ்சலி செய்கிற, வீர வணக்கம் செய்கிற கடமையைத்தான் கழக முன்னணியினர் கடந்த அக்டோபர் 11–ஆம் நாள் மேற்கொண்டு தமிழ் நாடெங்கும் வீரவணக்கம் செலுத்தினார்கள்.

அப்படிப்பட்ட தியாகிகள் பிறந்த மண் தமிழ் மண். அப்படிப்பட்ட தியாகத்தை மதிக்கிற நீங்கள், அப்படிப் பட்ட தியாக உள்ளங்கள் எழுப்பிய உணர்ச்சியைக் காப்பாற்றித் தரவேண்டும்.

அபபடிப்பட்ட உணர்வைக் காப்பாற்றுவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் – அந்த உணர்வுகளுக்கு நல்ல வடிவம்தர, இலக்கிய வடிவம்தர, நல்ல அறிவார்ந்த இளைஞர்கள் - பக்குவமான மனப்பாங்கோடு நாட்டிற்குத் தொண்டாற்றுகிற தகுதி பெற, மக்கள் நலக் கல்விக் கழகமும் அதற்குப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

அந்தக் கடமையைத் தொடர்வதற்காக இங்கே நமது நண்பர்கள் தொடங்கி இருக்கிற நல்ல பணிகள் மேலும் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

நண்பர் ஆரிய சங்கரன் அவர்கள் ஏறத்தாழ ஆயிரம் ரூபாய் நன்கொடையாக கிடைத்து இருப்பதாகப் பெருமையோடு குறிப்பிட்டார்கள்.

இன்றைய நிலையில் இது எவ்வளவு சாதாரணமான தொகை என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நிறைவான நிதிபெற முயற்சி, மிகப் பெரிய முயற்சி தேவை.

அந்தவகையில் நீங்கள் எல்லாம் ஒத்துழைத்து அறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் அமைய இருக்கின்ற அறிவாலயம் சிறந்த முறையிலே அமைய தாராவி மக்களுக்கு நல் வாழ்வு கிடைக்க ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் இந்த முயற்சி பெருவெற்றி பெற வேண்டும் என விரும்பி வாழ்த்துகிறேன்.

மணி விழாக காணுகின்ற மணிமொழியே! எங்கள்
மணவழகர் பெற்றெடுத்த கனிமொழியே! என்றும்
தனித்தமிழ் இனம்காத்து மொழிகாத்து இன்பத்
திராவிடரின் நலங்காத்து வாழி! வாழி!
பழிதாங்கிப் பழகிவிட்ட கலைஞர்க்கு ஆறுதல்
மொழிகளாயிருந்து நீங்கள் செயல்புரிந்து
எழில்குலைந்து கிடக்கின்ற இந்தநாடு விரைந்து
ஏற்றம் பெற உழைத்திடவே வாழி! வாழி!

—கலைக்குழு கோட்டைசாமி
51 வது வட்டம்-மண்ணடி-சென்னை-1.

# உதயக்கதிர்

( கலை இலக்கியத் திங்களிதழ் )

ஆசிரியர் : ச. அமுதன்

பொறுப்பாசிரியர் : சா. கணேசன்

29, சக்கரபாணி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33

அச்சிட்டோர் : தமிழோசை அச்சகம், சென்னை - 17.